www.tamilarangam.net

# தமிழுரிமை : தி.மு.கழகமும் பட்டினிப்போரும்




EELAN BOOKS NORWAY
SIGNATURE

- ஆதவன் சேதுவராயன்

www.tamilarangam.net

## காத்தில் விதைத்த முழக்கம்
## உன் மூச்சில் கலக்கவில்லையா ?
## தமிழா !

தமிழுக்காக
தியாகிகள்,
பொன்னை பொருளையல்ல
தங்களையே தந்தபோது
மண்ணேந்திக் கொண்டது
தமிழ் மண்ணாய்!

தமிழா !
தமிழருக்கும் தமிழுக்கும்
தங்களையே இழந்தவர்களின்
மேலான நோக்கத்தை
யார் ஏந்துவார்
உன்னைத் தவிர ?

வாழட்டும் தமிழ் என்று
மூச்சடங்கும் போதும்
காத்தில் விதைத்த முழக்கம்
உனது மூச்சில் கலக்கவில்லையா ?

மூச்சாய் மாறி இருந்தால்
பேச்சிலென்ன,
ஆட்சி, படிப்பு
எல்லாம் தமிழில் தானே!

29-1-95

www.tamilarangam.net

# தமிழுரிமை ☞ தி.மு.கழகமும் பட்டினிப்போரும்

முதற்பதிப்பு : அக்டோபர் 1999.

ஆசிரியர் : ஆதவன் சேதுவராயன்

உரிமை : ஆசிரியருக்கே.

வெளியீடு : தமிழி பதிப்பகம்,
பழக்காரனூர்,
கணக்கப்பட்டி (அஞ்சல்)
நங்கவள்ளி (வழி)
சேலம் மாவட்டம் - 636 454.

அச்சிட்டோர் : சரவணா ஆப்செட் அச்சகம்,
நங்கவள்ளி.

விலை : ரூ. 10/-

SEELAN BOOKS ★ NORWAY ★ SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முன்னுரை

**தமிழுரிமை : தி.மு.கழகமும் பட்டினிப் போரும்** என்ற நூல் தமிழுக்கு நெருக்கடி உச்சக்கட்டத்தில் இருக்கும் இந்த நேரத்தில் வெளிவருகிறது. தமிழ், தமிழ் என்று பேசிவரும் திராவிட இயக்கங்களால் தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தாலும் இது தமிழமைப்புகளால் ஓரளவு உணரப்பட்டே வந்திருந்தாலும் ஒன்றுபட்ட போராட்ட வடிவம் இல்லாது இருந்து வந்தது. இந்த நேரத்தில் இந்தப்பணியை தமிழ்ச்சான்றோர் பேரவை செய்திருப்பது பாராட்டுக்குரியது.

சிந்தனையாளர் மா. அர்த்தனாரி அவர்கள் 100 தமிழறிஞர்களின் சாகும்வரைப் பட்டினிப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர். போராட்டக்குழுவின் சேலம் மாவட்டத்தலைவர். இவர், நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தின் தலைமை நெறியாளர். நாய்கடித்து மருத்துவம் செய்து கொண்ட நிலையிலும் பட்டினிப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். இவருடன் கடந்த ஆண்டு தமிழகப் பெருவிழாவுக்குப் போயிருந்தேன். இவருடன் சென்றதால் சான்றோர் பேரவையின் பல நடப்புகளை கவனிக்க முடிந்தது. அந்த முறையில் இந்த வசதி கிடைக்க உதவியாய் இருந்த சிந்தனையாளர் மா. அர்த்தனாரி அவர்களுக்கு என்னுடைய நன்றி.

என் பள்ளி படிப்பிலிருந்து பல்கலை படிப்புவரை வந்த ஆசிரிய பெருமக்களில் தமிழ் மீது வாஞ்சை கொள்ளச் செய்த பெருமைக்குரிய ஆசிரியர் புலவர். நாரை. ச. நெல்லையப்பர் அவர்கள். அன்னாருக்கு பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்தபோது, நான் தமிழ் வாஞ்சையுள்ளவன் என்றறிந்து ஏடுகளில் வந்த தமிழ் சம்பந்தமான சேதிகளை எல்லாம் கத்தரித்து திரட்டித் தந்த நண்பர் உளவியலாளர் திரு. ஏ. சையத்ஹுஸைன் அவர்கள் என் நன்றிக்குரியவர்.

பல நேரங்களில் தன்னிடமுள்ள தமிழ் சம்மந்தமான நூல்களையும் பத்திரிக்கைச் சேதிகளையும் கொடுத்து உதவியவர் எனது நெருக்கமான நண்பர் திரு. பெ. பழனிசாமி அவர்கள். இவர் இந்நூல் அச்சுப்படிவத்தை திருத்துவதிலிருந்து நூல் வடிவம் பெறும்வரை உடனிருந்து உதவினார். நண்பருக்கு என்னுடைய நன்றி உரித்தாகட்டும்.

நான் நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தின் செயலாளர். நங்கவள்ளி தமிழ்ச் சங்கத்திலிருந்து, 23-3-99 -இல் நடந்த ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டத்தில் மேச்சேரியில் கலந்து கொண்ட நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தார் எல்லாருக்கும் நன்றி. 100 பேர்கள் பட்டினிப் போராட்டத்தில் கலந்து கொள்ள தானாக முன்வந்து கடிதத்தை கொடுத்த நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்த மொழிப்போர் தியாகி. திரு. திருமாறன் அவர்களுக்கும் நன்றி.

தமிழுக்காக உயிரைத்தந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலில் சிலையாக நிற்கும் திரு. இராசேந்திரன் அவர்களுக்கும் பிற மொழிப்போராளிகளுக்கும் என் அஞ்சலியும் வணக்கமும் உரித்தாகட்டும்.

பல நெருக்கடிகளுக்கு நடுவிலும் குறித்த நேரத்தில் இந்நூலை அச்சிட்டுத் தந்த சரவணா ஆப்செட் அச்சக உரிமையாளர் திரு. கோ. சரவணன் அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் நன்றி.

இந்த நூலிலுள்ள கருத்துக்களை படித்து தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறும் தமிழ் - தமிழருக்கு ஆதரவாய் இருந்து உதவுமாறு தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**-ஆதவன் சேதுவராயன்** (30-10-99)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழுரிமை ☞ தி.மு.கழகமும் பட்டினிப்போரும்

தமிழ், தமிழ்நாட்டு மக்களுக்கான மொழி. தமிழ்நாட்டில், 1971-ஆம் ஆண்டு கணக்குப்படி 84.67% தமிழ் பேசுவோர். தமிழ் நாட்டில் பேச்சு மொழியாய் தமிழிருக்கிறது. ஆயிர கணக்கான ஆண்டுகளாய் இலக்கண, இலக்கியம் உள்ள மொழி தான். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 6 கோடி பேர்களால் பேசப்படும் மொழி. ஆனால் ஆங்கிலம் படிப்பிலும் வேலையிலும் ஆதிக்கம் செய்கிறது. இந்தி, மத்திய அரசு மூலம் மத்திய அரசுத்துறைகளில் மேலோங்கி வரும் நிலை. இந்த மண்ணுக்குரிய மொழி ஆட்சியிலும் படிப்பிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது. இது இந்த மக்களுக்கும் மண்ணுக்கும் தமிழுக்கும் செய்யும் அவமான வஞ்சனையுந்தான்.

*உலகத்தின் பெயரில்*
*ஆங்கிலம் தாக்கும்*
*இந்தியம் என்று*
*இந்தியும் தாக்கும்*
*தமிழே நம்மை*
*இனமாய் காக்கும்*
*தமிழே நமக்கு*
*வழிவழி ஆதாரம்.*
*மத்ததால் எல்லாம்*
*பெரிதும் சேதாரம்!* (10-10-95)

திராவிட முன்னேற்ற கழகம் 50 ஆண்டுகளுக்கு முன்னால் உருவான அரசியல் கட்சி. இந்திய தேசிய காங்கிரஸ் இந்தி மொழியை தூக்கிப்பிடித்து மும்மொழித் திட்டத்தை அறிவித்ததிலிருந்து அதை எதிர்த்துப் போராடி வரும் கட்சி. இந்தி ஆதிக்கம் வந்தால் தமிழுக்கும் தமிழருக்கும் பாதகம் நேரும் என்று பேசிவரும் கட்சி. அதனால் தமிழ் வாஞ்சையுள்ள தமிழர்களிடம் ஆதரவு வேர்களைக் கொண்டிருக்கும் கட்சி. ஆனால், இந்தியைப் போலவே ஆங்கிலமும் அன்னிய மொழியாய் இருந்தும் அதை தூக்கிப் பிடித்து துதித்து வரும் கட்சி. இது, தி.மு.க.வுக்கு மட்டுமல்ல எல்லா திராவிடக் கட்சிகளுக்கும் பொருந்தும். திராவிடக் கட்சிகளில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தமிழ்நாட்டை ஆண்டிருக்கிற கட்சிகள். தமிழுக்கு உரிமை கேட்டு நூறு பேர்கள் பட்டினிப் போராட்டம் நடத்திய 1999-இல் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருப்பது கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி.

தமிழ்நாட்டில் தமிழ், ஆட்சியிலும் படிப்பிலும் இல்லாதது தமிழ் வாஞ்சையுள்ள ஒரு பிரிவாரிடம் வேதனையை உருவாக்கி வந்திருக்கிறது. மேடைப் பேச்சை நம்பி திராவிடக் கட்சிகள் தமிழைக் காக்கின்றன என்ற நம்பிக்கையுள்ள மக்களும் உண்டு. ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலம் பள்ளிகளில் நுழைந்திருந்தாலும் திராவிடக் கட்சிகளால் தான் தமிழ்நாட்டில் அது ஆதிக்கம் செய்துவருகிறது. இந்த நிலையைக் கண்டு தெளிந்தவர்கள் தான் தமிழுக்கு உரிமை கேட்டுப் போராடி வந்திருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திராவிடக் கட்சிகள் இந்தி எதிர்ப்பு, ஆங்கில ஆதரவு நிலையோடு தமிழ் வாஞ்சையை கிளறி விட்டிருக்கின்றன. இதனால் மக்களிடம் வலுவான ஆதரவைக் கொண்டிருக்கின்றன. ஆங்கிலத்தால் தமிழுக்குப் பாதிப்பு என்ற பொதுவான கருத்து தமிழறிஞர்களால் சொல்லப்பட்டே வந்திருக்கிறது. என்றாலும் முறையாய் தெளிவுபடுத்தி விளக்கும் போக்கு - ஒரு மொழித்திட்டம் என்பதை அறிவிக்கும் போக்கு சிறிது காலத்துக்கு முன்னரே வந்திருக்கிறது. பல தமிழியக்கங்களைக் கொண்ட தமிழுரிமைக் கூட்டமைப்பு இதில் முக்கிய பங்குள்ளதாய் தெரிகிறது. தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கங்களும் தங்களால் முடிந்தவரை தமிழுக்கு உழைத்து வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் தமிழ் ஆதரவு இயக்கங்களை ஒன்றிணைத்து, தமிழுக்கும் தமிழருக்குமான போராட்ட வழிமுறையை உருவாக்கி இருக்கிறது தமிழ்ச் சான்றோர் பேரவை. தமிழ்ச்சான்றோர் பேரவையின் நிறுவனர் மாணவர் நகலகம் திரு. நா. அருணாசலம் அவர்கள். அவர் தனது சொந்தப் பணத்தை ஏராளமாய்ச் செலவிட்டு இந்தப் பணியைச் செய்வது பாராட்டுக்குரியது.

மே 1-15/5/99 நந்தன் இதழில் நெஞ்சில் அலைகள் என்ற தொடரில் தமிழ்ச்சான்றோர் பேரவை எப்படி உருவானது என்று அதன் நிறுவனரே குறிப்பிடுகிறார்.

நான்கு வருடங்களுக்கு முன் அது நடந்தது. தமிழ்நாட்டின் தலைநகரில், அடையாறு பகுதியில், புனித பேட்ரிக் மேனிலைப்பள்ளி வளாகத்தில் நான்கு தமிழ்க் குழந்தைகள் அவமானத்தாலும் துயரத்தாலும் அழுது சிவந்த கண்களுடன் குப்பைகளை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது அந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தண்டனை.

அந்த மாணவர்கள் என்ன குற்றம் செய்து விட்டார்கள்? பள்ளி வளாகத்துக்குள் தங்கள் தாய்மொழியில் தமிழில் - பேசினார்களாம்!

தமிழ்நாட்டில் தமிழ் மாணவர்கள் தமிழில் பேசக்கூடாதா? அது தண்டனைக்குரிய குற்றமா?

தாம்பரத்தில் ஒரு பள்ளி. அங்கே இரு மாணவர்கள் கழுத்தில் ஒரு அறிவிப்புப் பலகையை தொங்கவிட்டுக் கொண்டு ஒவ்வொரு வகுப்பறைக்கு முன்னாலும் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். தலை குனிந்து செல்லும் அந்த இருமாணவர்களையும் கேலி செய்து தாளம் போட்டபடி சில மாணவர்கள் பின் தொடர்கிறார்கள். அடக்க முடியாத குற்றவாளிகளை அவமானப்படுத்துவது போல் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரிக்கிறார்கள், நெருப்பில் எரிகிறது இரு இளம் நெஞ்சங்கள்.

இங்கே என்ன நடந்துவிட்டது? அந்த மாணவர்கள் தமிழில் பேசிவிட்டார்கள். கழுத்தில் தொங்கிய பலகையில் அதற்குத்தான் மன்னிப்புக் கேட்கிறார்கள்; மன்னிக்கவும். "இனி நாங்கள் தமிழில் பேசமாட்டோம்"

இந்த காட்சிகளைக் கண்டபோது நெஞ்சம் பதறியது.

முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களைத் தொடர்பு கொண்டோம். பதைப்புற்ற தமிழுணர்வாளர்களும் ஒன்று திரண்டார்கள். புனித பேட்ரிக் பள்ளி நிர்வாகத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராக ஒரு போராட்டம் தொடங்கியது. அன்றுதான் தமிழ்ச்சான்றோர் பேரவைக்கான வித்து ஊன்றப்பட்டது.

தமிழ்நாட்டில் தமிழர்கள் உயிரோடு இருக்கும்போதே தமிழ் அவமானப்படுத்தப்படுகிறது. தமிழ் பேசுவது தண்டனைக்குரியதாகிறது. இதற்குப் பிறகும் இழிவு சுமந்து ஊர்ந்து திரிவதா தமிழன்? மான உணர்ச்சி மிகுந்த தமிழர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியாகத் தொடங்கப்பட்டதுதான் தமிழ்ச் சான்றோர் பேரவை.

இவை தமிழ்ச்சான்றோர் பேரவை தொடங்க காரணமான நடப்புகள். தமிழ் நாட்டில் தமிழைச் சொல்லியே ஆட்சிக்கு வந்தவர்கள் ஆளும் காலத்தில் தமிழுக்கு தமிழ் மாணவர்களுக்கு எப்பேர்பட்ட அவமானம்! 4 ஆண்டுகளுக்கு முன்னர் என்றால் அது அ.தி.மு.க. ஆட்சியாக இருந்திருக்க கூடும்.

புனித பேட்ரிக் பள்ளிக்கு தமிழ் புனிதமில்லை, ஆங்கிலத்தில் தான் புனிதம் இருக்கிறது. நாட்டு துரோகத்தை விட மொழிச்சமுதாய வஞ்சனை கடுமையானது.

தமிழ்ச்சான்றோர் பேரவை மூன்று ஆண்டுகளாக தமிழகப் பெருவிழாவை நடத்தினாலும் கடந்த ஆண்டு நடந்திருக்கும் விழா தான் ஒரு திருப்பத்தை உருவாக்கியது.

பேரவையின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட அறிஞர் சிலம்பொலியார் யாரிடமும் கலந்து கொள்ளாமல் தன்னெழுச்சியாக, தமிழ் நாட்டின் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பயிற்று மொழியாக வேண்டும். அதன் பொருட்டு உண்ணாதிருந்து உயிர் துறப்பேன் என்று அறிவித்தார் என்கிறார் சான்றோர் பேரவை நிறுவனர். இந்த அறிவிப்பை சிலம்பொலியார் வெளியிட்டபோது நானும் அரங்கத்திலிருந்தேன்.

### *100 தமிழர்கள் சாகும்வரை பட்டினிப்போர்.*

சிலம்பொலியார் அவர்களின் அறிவிப்புக்கு ஏத்தவாறு போராட்டத்துக்கான தயாரிப்புகள் செய்யப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை ஏதேனும் இரு பாடங்களை தமிழில் நடத்துவது என்று 16-11-98 அன்று முதல்வர் அறிவிக்கிறார். போராட்டக்குழுவினர் இதை ஒப்புக் கொள்ளாமல் டிசம்பர் முதல் மார்ச் வரை போராட்டத்துக்கான விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 23-3-99 -இல் தமிழ்நாடு முழுவதும் தமிழுக்கு உரிமை கேட்டு ஒருநாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் நடந்தது. போராட்டக்குழுவின் சேலம் மாவட்டத் தலைவராக நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தின் தலைமை நெறியாளர் சிந்தனையாளர் மா. அர்த்தனாரி அவர்கள் இருந்தார்கள். சேலம் மாவட்ட மையமாக இருந்ததால் நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சேலத்தில் கலந்து கொள்ளலாம் என்ற முடிவோடு இருந்ததால் நங்கவள்ளியில் ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் நடத்த முடியவில்லை. 23-3-99 அன்று சேலத்தில் போராட்டம் நடத்த முடியாததால் நங்கவள்ளி தமிழ்ச்சங்கத்தினர் மேச்சேரியில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டோம். (சேலம் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களை சட்டமன்றத்தில் தாமரைக்கனி மோதிரக் கையால் தாக்கியதை அடுத்து ஏற்பட்ட நெருக்கடியான சூழலின் காரணமாக 30-3-99 க்கு போராட்டம் தள்ளிவைக்கப்பட்டு நடந்தது)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

30-3-99 அன்று சேலத்தில் நடந்த ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டத்தில் சிந்தனையாளரும் நானும் கலந்து கொண்டோம். 74 ஊர்களில் ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போர் நடந்ததாய் மே 1-15 நந்தன் ஏடு குறிப்பிடுகிறது.

இந்த அடையாளப் பட்டினிப் போராட்டம் தமிழ்நாடு முழுவதும் போராட்டச் சேதியை பரப்பியது. ஆதரவு அமைப்புகளை உறுதிபடுத்தியது. இதை அடுத்து 100 தமிழாதரவாளர்கள் பட்டினிப் போராட்டம் 25-4-99 ல் சென்னையில் தொடங்கியது.

1-11-98 தமிழகப் பெருவிழாவில் சிலம்பொலியார் போராட்ட அறிவிப்பை வெளியிட்டது முதல் போராட்டம் தொடங்கும் வரை சுமார் 400 பேர்கள் சாகும் வரை பட்டினிப் போராட்டத்தில் கலந்து கொள்ள பெயரைத் தந்திருக்கிறார்கள், தமிழுக்காகப் போராட தணியாத ஆவலோடு அணி அணியாய் தமிழர் வருவதைக் கண்டு மனம் பூரிக்கிறது.

தமிழினத்தலைவர், முத்தமிழ் அறிஞர் என்று தி.மு.க. தொண்டர்கள் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களை அழைப்பதுண்டு, மக்களும் அப்படி நினைப்பதுண்டு. இப்படிப்பட்ட கலைஞர் ஆட்சியில் தான் தமிழுக்கு உரிமை கோரி 100 தமிழறிஞர்கள் சாகும் வரை பட்டினிப் போராட்டம் 25-4-99 ல் தொடங்கியது. சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலத்துப் பக்கத்திலிருந்து பேரணி புறப்பட்டது. பட்டினிப்போராளிகள் நூறு பேர்களும் இரண்டு லாரிகளில் இருக்கைகள் போடப்பட்டு அமர வைத்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். முன்னணித்தலைவர்கள் ஊர்வலத்தில் நடந்து வர, பேரணி பல மாதிரியான தமிழாதரவு முழக்கங்களோடு வள்ளுவர் கோட்டத்தை அடைந்தது. வள்ளுவர் கோட்டத்துக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நூறு தமிழாதரவாளர்களின் பட்டினிப் போராட்டம் முனைவர் தமிழண்ணல் அவர்கள் தலைமையில் தொடங்கியது. ஒருங்கிணைப்பாளராய் இருந்த சிலம்பொலியார் போராட்டத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டாலும் போராட்டம் உறுதியோடு நடந்தது. தமிழ்ச்சான்றோர் பேரவை முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பல இடங்களிலிருந்தும் வந்து பல இயக்கங்கள் தமிழால் ஒன்றுபட்டுப் போராடின. தமிழால் ஒன்றுபடுவோம் என்பது தான் சான்றோர் பேரவையின் முக்கிய முழக்கமும்.

23-4-99 மாலை கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன், தமிழ் அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோருடன் சிலம்பொலியார், தமிழண்ணல், சிற்பி பாலசுப்ரமணியம், இளவரசு ஆகியோரிடம் நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்து பட்டினிப் போராட்டத்தை ஒருநாள் அடையாளப் பட்டினிப் போராட்டமாய் முடித்துக் கொள்ளலாம் என்று சிலம்பொலியார் சொன்னதாகவும் அதில் எந்த விதமான உறுதியும் இல்லை என்று போராட்டக்குழு சொன்னதாலும் சிலம்பொலியார் போராட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

24-4-99 இல் நடந்த கூட்டத்திலும் சிலம்பொலியார் கலந்து கொள்ளவில்லை. போராட்டக் குழுவின் தலைவராகத் தமிழண்ணல் தேர்ந்தெடுக்கப்பட்டு போராட்டம் தொடங்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நக்கீரன் ஏப்ரல் 30-1999 இதழில் சிலம்பொலியார் பின்வருமாறு கூறியுள்ளார். முதல்வர் சார்பில் பேராசிரியரும், தமிழ்க்குடிமகனும் எங்களிடம் பேசினர். அதனை ஏற்று அடையாள உண்ணாவிரதம் மட்டும் நடத்தலாம் என்று தெரிவித்தோம், அவர்கள் ஏற்கவில்லை. அவர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். கலைஞரை தமிழ்த்துரோகி என்று சித்தரிப்பது தான் அவர்களின் நோக்கமாக இருக்கிறது

அதற்கு நான் பயன்படவில்லை.

இது மே -1999 தமிழர் கண்ணோட்டத்தில் வந்த சேதி.

"இப்போராட்டத்தில் விடுதலைப்புலிகள் ஆதரவுப் பிரச்சனை எந்த இடத்திலும் வரவில்லை. கலைஞருக்குத் தமிழ்த் துரோகிப்பட்டம் கட்டுவதற்காகவே இப்போராட்டத்தை தீவிரப்படுத்தியதாக அவர் கூறுவது அவரது கலைஞர் விசுவாசத்தைக் காட்டப் பயன்படுமே தவிர போராட்டக் குழுவினருக்கு கலைஞர் மேல் விரோதம் என்பதைக் காட்டப் பயன்படாது. இப் போராட்டத்தில் எந்த இடத்திலும் கலைஞரை முதன்மைப்படுத்தி எதிர்க்கும் போக்கு எழவில்லை. தமிழுக்கு செய்ய வேண்டியதை முதன்மைப்படுத்தியது தான் இப்போராட்டம். தமிழா! கலைஞரா என்ற கேள்வியை தாமே எழுப்பிக்கொண்டு கலைஞர் பக்கம் சேர்ந்துவிட்டார் சிலம்பொலியார். போராட்டக் குழுவினரைப் பொறுத்தவரை கலைஞர் வெறுப்பும் கிடையாது, தமிழைக் காவு கொடுக்கக் கூடிய அளவு கலைஞர் விசுவாசமும் கிடையாது" இது மே 1999 தமிழர் கண்ணோட்டத்தில் திரு. பெ. மணியரசன் அவர்கள் தெரிவிப்பது.

இது தான் சான்றோர் பேரவையின் நிலை, என்றாலும் தி.மு.க. தலைவர் தமிழுக்குச் செய்ததும் செய்யத்தவறியதும் என்ன என்று பார்ப்பது நம் நோக்கம்.

தமிழைச்சொல்லியே ஆட்சிக்கு வந்தவரிடம் இவர்கள் கேட்டது தான் என்ன ?

1. தமிழ்நாட்டில் அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே மொழிப்பாடமாகவும் பாடமொழியாகவும் இருக்க வேண்டும். 6-ஆம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்பிக்கப்படலாம்.

2. பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ்வழிப் பாடநூல்கள் தயாராகவும் அறிமுக நிலையிலும் இருப்பதால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித்துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக்கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

3. தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக்கல்வி பயின்றவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும்.

இம்மூன்று கோரிக்கைகளையும் 11-11-98 -லேயே எடுத்துச்சொல்லியும் கண்டு கொள்ளாத தமிழினத்தலைவரின் அரசிடம் தான் இதை செயலாக்கக் கோரி போராட்டம் நடக்கிறது. முதலாவது கோரிக்கையை வைத்து 1-11-98-லேயே 100 தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப் போராட்டம் அறிவிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*"வீழ்வது நாமாக இருப்பினும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்"*

என்று முழங்கிய கலைஞரிடம் தான் இப்படிக் கேட்க வேண்டிய அவலம்! இதைச் சான்றோர் பேரவை கட்டம் கட்டிப்போடுகிறது. இப்படிச் சொன்னவர் செய்யவில்லை என்றோ சொன்னீர்களே செய்யுங்கள் என்றோ எந்தவித விமர்சனமும் செய்யவில்லை. இப்படி இருந்தும் கலைஞருக்கு எதிராக செயல்படுவதாக சிலம்பொலியார் அறிக்கை விட்டது பொருத்தமாய் இருக்கவில்லை. ஆனால் ஆண்ட திராவிடக்கட்சிகளை அம்பலப்படுத்திக் காட்டுவது நம்முடைய தெளிவான நோக்கமே! பேரவையின் அறிக்கை, மொழி குறித்த கோரிக்கை விளக்கமாய் இருந்தது. ஆனால் தி.மு.க.வின் நிலையை அம்பலப்படுத்துவதாய் இருக்கவில்லை.

தி.மு.க.வின் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறபோது அதன் தலைவர்கள் தங்களுக்காக தமிழை விளம்பர மொழி ஆக்கிக் கொண்டது விளங்கும்.

*பதவி நாற்காலியில் வீழ்வது நாமாக இருந்தாலும் -
நமது மேடைகளில் வாழ்வது தமிழாக இருக்கட்டும்.*

- என்பது தான் கலைஞருடைய பேச்சுக்கான மெய்யான பொருள்.

போராட்ட நாளில், தி.மு.க. தமிழுக்குச் செய்ததை எல்லாம் பட்டியலிடுகிறது முரசொலி. இம்மூன்று கோரிக்கைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றி இருப்பதாக அது குறிப்பிடவில்லை.

சங்கத்தமிழ், முத்தமிழ், வாழுந்தமிழ் டாக்டர் கலைஞர், தமிழனத்தலைவர், தமிழாய்ந்த தலைமகன் என்றெல்லாம் துதிக்கப்படும் மதிக்கப்படும் தி.மு.க. தலைவர் கலைஞர் தமிழக முதல்வராய் இருந்து விடும் அறிக்கை என்ன தான் சொல்லுகிறது ?

அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக இருக்க கொள்கை ரீதியாக விரும்புவதாகச் சொல்கிறது.

மறுபுறம் பெற்றோர்கள் மாணவர்கள் விருப்பத்துக்கு மாறாக பயிற்சி மொழியை கட்டாயப்படுத்த முடியுமா ? தமிழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் வாழ்கின்ற நிலையில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக்கி உத்தரவு பிறபிக்க இயலுமா ?

சிறுபான்மையினராக உள்ள அனைவரும் தங்கள் விருப்பத்தேர்வின்படி கல்வி நிறுவனங்களை நிறுவவும் செயலாட்சி செய்யவும் உரிமை உடையவர் என்று அரசியலமைப்புச்சட்டம் உரிமை வழங்கி இருக்கும்போது சிறுபான்மையினர் நடத்தும் கல்விக் கூடங்களில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்ளுமாறு அரசு ஆணையிட இயலுமா ?

தமிழ்நாட்டில் மிக நீண்டகாலமாக அனுமதித்து நடைபெற்றுவரும் ஆங்கிலோ - இந்தியர் பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்டு வர வழிமுறைகள் உள்ளனவா ? தமிழைத் பயிற்சி மொழியாக ஏற்று கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து ஊக்குவித்திட வழிமுறைகள் உள்ளனவா ? என்று ஆராயக் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போடலாம் என்கிறது தமிழாய்ந்த தலைமகனாரிடமிருந்து வந்த அறிக்கை. இது, தமிழுக்கும், தமிழருக்கும் தமிழாதரவாளர்களுக்கும் எதிரான கேள்வி அறிக்கை தான். மேலும், தமிழரல்லாதவர்களுக்கு ஆதரவானது. அவர்களைத் தூண்டிவிடும் தன்மை கொண்டது. எதிர்மறையாய் கேட்டுவிட்டு ஆராயக் குழு போடலாம், போராட்டத்தை ஒருநாள் போராட்டமாய் முடித்துக் கொள்ளுங்கள் என்று அறிக்கை கேட்டுக்கொள்கிறது.

தமிழாய்ந்த தலைமகனார் தமிழுக்கு ஆதரவாய் இல்லாதவர்களின் நலனை தமிழில் ஆராய்கிறார். தமிழைக் கொண்டு வரமுடியுமா என்று ஆராய குழுப்போடலாம் என்கிறார்.

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தமிழைச் சொல்லி ஆட்சி கண்டு, தமிழ்நாட்டை ஆண்டு கொண்டு தமிழுக்கும் தமிழருக்கும் எதிரான அறிக்கை விடுவது அருமைதான்.

தமிழரிடம் ஓட்டுப்பொறுக்கத் தமிழ்
தமிழரை ஒடுக்கி வைக்க ஆங்கிலம் -

என்பதை நடப்பாக்கிக் கொண்டவர்கள் நெருக்கடி வரும்போது தான் நிலைமையை ஆராய்கிறார்கள். இல்லை; இல்லை ஆராய குழுப்போடலாம் என்கிறார்கள். ***"மூச்சுக்கொள்கையாய் இருந்தால் அது ஆட்சிக்கு வந்ததும் நிறைவேறும், பேச்சுக் கொள்கையாய் இருந்தால் அது மேடைகளில் மட்டுந்தான் அரங்கேறும்".***

கடந்த ஆண்டு பொறியியலை தமிழில் கொண்டு வருகிறேன் என்று சொன்னவர் இந்த ஆண்டு (1998) 5-ஆம் வகுப்பு வரை அறிவியலை தமிழில் கொண்டுவர மறுக்கிறார் என்று சுப. வீ தன் மேடைப்பேச்சில் குறிப்பிட்டதே இதுக்கான சரியான சான்று!

"எது எதற்கோ ஆட்சியை இழந்திருக்கிறேன் தமிழ்வழிக் கல்வித் திட்டத்திற்கான எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் நடைமுறைப்படுத்திவிட்டு அதற்காகவும் ஒருமுறை ஆட்சியை இழந்திருக்கலாம். அப்படி செய்யாததற்கு இப்போது வருத்தப்படுகிறேன் என்று சிறிது காலத்துக்கு முன்னர் செருமன் அரங்கில் நடந்த பெருஞ்சித்திரனார் நினைவு நாள் கூட்டத்தில் பேசினார் கலைஞர்" என்று அச்சமில்லை இதழில் குறிப்பிட்டிருக்கிறார் அதன் ஆசிரியர் திரு. ந. இறைவன் அவர்கள்.

"ஆட்சியில் இல்லாதபோது - தமிழுக்காக வானத்தை வில்லாய் வளைப்பேன் என்பதுபோல எது எதையோ பேசுவதும் - ஆட்சிக்கு வந்தபின் தமிழுக்காக ஒரு துரும்பையும் அசைக்காமல் முதலமைச்சராய் பவனி வருவதும் கருணாநிதியின் இயல்பு...? என்று அவர் விமர்சித்திருப்பது சரியானது தானே?

தமிழாதரவாளர்களைக் கவரும் காந்தப்பேச்சை மேடைகளில் அள்ளி வீசுவது. அதன் மூலம் தானும் தமிழ் ஆதரவாளர் என்று நம்பச் செய்வது, அதனால் தமிழ் ஆதரவாளர்களின் ஆதரவைப் பெறுவது என்பது தான் நடப்பு. தமிழினத் தலைவர் ஆட்சியில் இருக்கும்போது கூட, 100 தமிழறிஞர்கள் தங்களை சாவின் வாயில் தரத்துணிந்தபோது கூட எதிர்மறையான வினா அறிக்கை தான் வருகிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



100 தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப்போர் (25, ஏப்ரல் 1999, சென்னை)

திரு. *பழ. நெடுமாறன்* அவர்கள் (தமிழர் தேசிய இயக்க தலைவர்)
திரு. *நா. அருணாசலம்* அவர்கள் (தமிழ்ச்சான்றோர் பேரவைநிறுவனர்) } நிற்பவர்கள்
முனைவர். *தமிழண்ணல்* அவர்கள் (பட்டினிப் போராட்டக்குழுத் தலைவர்)
முனைவர். *சிற்பி பாலசுப்ரமணியம்* அவர்கள் } (வலது புறம்)



1 நாள் அடையாளப் பட்டினிப்போர், ( 30, மார்ச் 1999 சேலம். )
சிந்தனையாளர் *மா. அர்த்தனாரி* (வலது புறம்)
மற்றும் ***சேலத்தைச் சேர்ந்த தமிழாதரவாளர்கள்.***

www.tamilarangam.net

என்பது வேதனையானது. முதல் நாள் பட்டினிப் போராட்டம் சாதாரணமாய் முடிந்திருந்தாலும் இரண்டாம் நாள் திண்டுக்கல்லைச் சேர்ந்த ஒருவரும் சிந்தனையாளர் மா. அர்த்தனாரி அவர்களும் மயங்கி படுத்துவிட்ட நிலை. பந்தலிலே அமர்ந்திருந்த ஒவ்வொரு முகங்களிலும் வெளிப்பட்ட வாட்டம் உள்ளத்தைக் குமுறச் செய்தது!

தமிழ் ஆதரவாளர்கள் மத்தியில் தமிழை துதிப்பது, ஆட்சிக்கு வந்ததும் ஆங்கிலத்தை தூக்கிப்பிடிப்பது, தமிழுக்கு வார்த்தைச்சேவை, ஆங்கிலத்துக்கு அடிமைச் சேவை!.

எதிர்மறையான வினா அறிக்கை விட்ட கலைஞர் அவர்களுக்கு போராட்டக்குழுவின் தலைவர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் பதிலளிக்கிறார்.

"பேரவை முன் வைத்த மூன்று கோரிக்கைகளில் எது குறித்தும் தெளிவான திட்டவட்டமான உறுதிமொழி ஏதும் அளிக்கப்படவில்லை. மேலும் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளதாக மட்டுமே கூறுகிறது என்று சங்கத்தமிழின் அறிக்கையின் அழகை எடுத்துக்காட்டியுள்ளார்.

மொழிச்சிறுபான்மையர் தங்கள் மொழியைக் கற்றுக் கொண்டே தமிழை மொழிப்பாடமாக கட்டாயமாக்க முடியும் என்றும் அவர்களது பல பள்ளிகளில் பாடமொழியை அவர்களது மொழி இல்லாமல் ஆங்கிலமே இருக்கிறது. எனவே ஆங்கிலத்தை நீக்கிவிட்டு தமிழை பாடமொழியாக்கினால் அவர்கள் மொழிக்கு பாதிப்பு இருக்காது" என்று தெரிவித்தது அவ்வறிக்கை.

"தமிழக அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் நீண்ட காலமாக ஆங்கிலமே இருப்பது தவறானது என்றும் நடுவண் அரசு வாரிய பள்ளிகளிலும் தமிழ் பாடமொழியாக இருக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் மறுக்கும் பள்ளிகளுக்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்க மறுக்கலாம் என்றும் விளக்கமளித்துள்ளார்." போராட்டம் தொடர்கிறது.

இன்னின்ன இடங்களில் இவ்வாறு நிறைவேற்றி இருக்கிறோம் என்றும் இன்னின்ன இடங்களில் இன்னின்ன காரணங்களால் உடனே செய்யமுடியவில்லை என்றும் இன்னின்ன காரணங்களால் செய்ய வழி இல்லை என்றும் சொல்ல வேண்டிய கலைஞர் இப்போது தான் ஆராயவே குழுப்போடலாம் என்பது கொடுமையானது.

போராட்டக்குழுத் தலைவரின் அறிக்கை தமிழக முதல்வரின் அறிக்கைக்கு பதிலளித்துள்ளதே தவிர சிலம்பொலியார் சொன்னது போல கலைஞருக்கு எதிராக நின்றுவிடவில்லை. ஆனால் கலைஞர் தமிழக்குச் செய்யத்தவறி இருந்தால் எடுத்துக்காட்டுவதும் தவறல்ல. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இந்தி எதிர்ப்பை வலுவாக நடத்தியபோது தமிழ் வாஞ்சையை உருவாக்கி வந்த திராவிட இயக்கங்கள் ஆங்கிலத்தை தூக்கிப்பிடித்தே வந்துள்ளன. இதனால் தான் தமிழ்நாட்டில் தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டது; ஆங்கிலம் முன்னுக்கு வந்தது.

தமிழ்ச்சமுதாய மொழியான தமிழ் தமிழ்நாட்டில் எல்லா மட்டங்களிலும் வாழவேண்டும் ஆளவேண்டும் என்றால் வினா அறிக்கை விடுகிறார் கலைஞர். ஆனால், தமிழ்நாட்டில் நாங்கள் 42% அதனால் எங்களுக்கு எல்லா இடங்களிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

42 விழுக்காடு வேண்டும் என்று கேட்கின்றன. தெலுங்கர் இயக்கங்கள். தமிழ்நாடு என்ற பெயரை மாத்த வேண்டும். பழையபடி சென்னை மாநிலம் என்றே இருக்க வேண்டும் என்று கோரும் தெலுங்கர் இயக்கத்துக்கு (திராவிட தெலுங்கர் முன்னேற்றக் கழகத்துக்கு) தமிழினத்தலைவர் வாழிச்சேதி அனுப்பியது ஏன்? 27-6-99 -இல் நடந்த இம்மாநாட்டுக்கு வாழிச்சேதி அனுப்பிய கலைஞர் தமிழ்நாட்டில் தமிழுக்கு நடக்கும் பட்டினிப் போராட்டத்துக்கு எதிராக வினா அறிக்கை தருகிறார்.

தமிழ்நாட்டில் தமிழில்லை என்று பேசுவார்கள் திராவிடக்கட்சியார்தான். ஆனால், தெலுங்கு பிராமணர்களிலிருந்து அருந்ததியர் வரை தெலுங்கு பேசும் 34 சாதிகளை இணைத்து உருவாக்கிய திராவிட தெலுங்கர் இயக்கமாய் தெரிகிறது! அவரவர்களுக்கான உரிமையையும் பங்கையும் நாம் மறுக்கவில்லை.

70 நாட்களுக்கும் மேல் உண்ணாவிரதமிருந்து மாண்டுபோன சங்கரலிங்க நாடார் கோரியது தமிழ்நாடு என்று பெயர் தான். அண்ணா முதலமைச்சரானதும் நமது மாநிலத்துக்கு பெயரிட்டது தமிழ்நாடு என்று. அண்ணா வழியில் வந்ததாகச் சொல்லும் கலைஞர் தந்தது தமிழ்நாடு என்ற பெயரை மாத்திடக் கோருவோரின் இயக்கத்துக்கு வாழிச்சேதி!

தமிழ்நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிடம் தமிழ் வழிப்படிப்புதான் இருக்கிறதா? மொழிச் சிறுபான்மையர் ஒப்பமாட்டார்கள் என்றால் தமிழ்நாடு என்ற பெயரைக் கூடத்தான் தெலுங்கர் இயக்கங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இதையும் சிறுபான்மையர் நலனுக்கு என்று மாற்றிவிடப் போகிறாரா? பெரும்பாலும் தி.மு.க. உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் மக்கள் எண்ணிக்கையில் (1971 - கணக்கு) 8.75% இருக்கும் தெலுங்கர்களுக்கு 5 அமைச்சர்களும் (20%) 35 எம்.எல்.ஏக்களும் (15%) இருக்கும்போது இதுவும் நடக்கும் இதுக்கு மேலும் நடக்கும். கடந்த ஆண்டு தெலுங்கு வழி ஆசிரியர் பயிற்சிக்கு தமிழ்நாட்டு உள்ளிடங்களில் ஏற்கெனவே உள்ள 50 இடங்களுடன் புதிதாக 80 ($1^1/_2$ மடங்கு) இடங்களை, கொண்டு வந்தது தமிழினத் தலைவர் அரசு. இதை எதிர்த்து நங்கவள்ளி தமிழ்ச்சங்கம் போட்ட தீர்மானத்தை பல பத்திரிக்கைகளுக்கு அனுப்பியும் தமிழர் கண்ணோட்டமும் வேர்களும் மட்டுமே வெளியிட்டன. நந்தனுக்கு இரண்டு முறை அனுப்பியும் ஒரு முறை சுப. வீரபாண்டியன் அவர்களிடம் நேரில் கொடுத்தும் கூட ஏனோ வெளியிடவில்லை.

நீண்ட காலமாக இருந்த ஆங்கிலம் நீக்கப்பட சிக்கல் வருமா என்றால் நீண்ட காலமாக இருந்த ஆங்கில ஆட்சி நீக்கப்பட்டபோது சிக்கல் இல்லாமலா இருந்தது?

கி. பி. 1850 - களிலேயே பள்ளிகள் வந்திருந்தாலும் 1950 - க்குப் பொறவு தான் கிராமந்தோறும் தொடக்கப்பள்ளிகள் வந்துள்ளன. ஆனால் 1980 வரை ஆங்கிலப்பள்ளிகள் அதிகம் இல்லை. குறிப்பாக 1985 -லிருந்துதான் ஆங்கிலப்பள்ளிகள் பெருக்கம் கண்டன. 1967 முதல் 1999 ஆகிய இப்போது வரை திராவிடக்கட்சிகள் தானே - தி.மு.க., அ.தி.மு.க. மாறி மாறி ஆண்டு வருகின்றன? தமிழன், மதமாத்தம் செய்யப்படுவது போல மொழிமாத்தம் செய்யப்பட்டது இப்போது தானே?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் வாழவேண்டும் எனும் நூலில் முன்னாள் துணைவேந்தர் திரு. ச. முத்துக்குமரன் அவர்கள் தரும் விபரம் இதைத்தானே காட்டுகிறது?

| ஆண்டு | மாணவர் விழுக்காடு | |
|---|---|---|
| | மாநிலக்கல்வி வாரியம் (தமிழ்) % | மையக்கல்வி வாரியம் மெட்ரிகுலேசன், ஆங்கிலோ - இந்திய பள்ளிகள் (ஆங்கிலம்) |
| 1980 - 81 | 92.2 | 7.80 |
| 1990 - 91 | 87.6 | 12.40 |
| 1994 - 95 | 85.00 | 15.00 |

26-4-99 இல் தமிழ்த்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் போராட்டக் குழுவுடன் பேசி முடிவெடுத்து அறிக்கை விட்டிருக்கிறார். அவர் கையொப்பமிட்டளித்த அறிக்கையின் அடிப்படையில் போராட்டக்குழுத் தலைவர் முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கு பழச்சாறு கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தார்.

அரசுச் சார்பான 41,417 பள்ளிகளிலும் இப்போது தமிழே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் உள்ளது. எஞ்சியுள்ள மெட்ரிகுலேசன் முதலான 2,402 பள்ளிகளில் மட்டுமே இந்த முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒன்று முதல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப்பள்ளிகள், நாடு முழுவதும் பரவியுள்ள மழலையர் பள்ளிகள் தொடங்கி மெட்ரிகுலேசன் பள்ளிகள் வரையில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒன்றே மொழிப்பாடமாகவும், பயிற்று மொழிப்பாடமாகவும் இருக்க வேண்டுமென்ற கொள்கையில் தமிழ் அறிஞர்களுக்கும் - தமிழக அரசுக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் கிடையாது.

இக்கொள்கையினை நிறைவேற்றும் வகையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஏப்ரல் 30 க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே 31 க்குள் அக்குழுவிடமிருந்து பரிந்துரை அறிக்கை பெற்று வரும் கல்வியாண்டிலேயே அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு செய்யும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு உண்ணா நோன்பிருக்கும் தமிழ் அறிஞர்களோடு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் முனைவர் தமிழ்குடிமகன் அவர்கள் கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவாகும் இது.

ஒப்பம்

தமிழ்குடிமகன்

26-4-99

1-5 வகுப்பு வரை தமிழை எல்லாமாய் கொண்டுவருவதாய் கொள்கை அளவில் ஒப்புதம். குழுவைப் போட்டு அறிக்கை வாங்கி இவ்வாண்டேசெயலாக்க முயற்சி செய்வது என்ற முடிவு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரடியான வினா அறிக்கை விட்டிருந்த முதலமைச்சரின் நிலை மாறி ஒரு காலவரம்புக்குள் முயற்சி செய்ய வருகிறது. செயலுக்கு கொண்டு வருவதாய்ச் சொல்லுகிறது. பிற இரண்டு கோரிக்கைகள் குறித்து எந்தக் கருத்தும் இல்லை.

நாடு முழுவதும் பரவியுள்ள தமிழியக்கங்களைத் திரட்டி 100 பேர்கள் பட்டினிப் போராட்டம் நடத்தி வாடிவதங்கிய நிலையில் தான் தமிழாய்ந்த தலைமகனாருக்கு இப்படிச் சொல்ல தோணுகிறது!

தி.மு.க. நடத்தும் தமிழக அரசுக்கும் தமிழறிஞர்களுக்கும் ஒத்தக் கருத்து என்கிறது அறிக்கை. இருமொழிக் கொள்கையின் மூலவரே தி.மு.க. தான். ஒருமொழிக் கொள்கை போராட்டக்குழுவின் கொள்கை. போராட்ட சமயத்தில் தினகரன் தனது தலையங்கத்தில் தமிழண்ணல் அவர்கள் வைக்கும் கோரிக்கை அண்ணாவின் மொழித்திட்டத்துக்கு எதிரானது என்றது. எப்படியோ தமிழறிஞர்கள் வலியுறுத்தும் ஒருமொழித்திட்டத்துக்கு தி.மு.க. மாறி இருந்தால் நல்லது தான்!

மும்மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை
இருமொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை
ஒருமொழிக் கொள்கை உரிமைக் கொள்கை -என்பது தான்.

தமிழுரிமைக் கூட்டமைப்பின் கொள்கை முடிவு. மும்மொழித் திட்டத்தில் இந்தியும், இருமொழி திட்டத்தில் ஆங்கிலமும் ஆதிக்க மொழிகளாய் வருகின்றன. தமிழ் அடிமை மொழியாகிறது. ஆனால் ஒருமொழித் திட்டத்தில் தமிழ் முழுவாண்மை மொழியாகிறது.

*ராபர்ட் கிளைவ் முதல்*
*மவுண்ட் பேட்டன் வரை*
*ஆங்கிலேயனின் பிரதிநிதி;*
*ஆங்கிலத்தின் பிரதிநிதி!*
*சுதந்திரம் அடைந்ததாய்ச்*
*சொல்லப்பட்டும்,*
*ராசகோபாலாச்சாரியார் முதல்*
*பக்தவச்சலம் வரை*
*இந்திய பிரதிநிதி,*
*கூடவே,*
*இந்திப் பிரதிநிதி!*
*அண்ணா முதல் கலைஞர் வரை*
*தமிழன் பிரதிநிதி!*
*மேலாய்*
*ஏன் ஆங்கிலத்தின் பிரதிநிதி?*
*ஆங்கிலேயன்*
*ஆங்கிலத்தின் பிரதிநிதி;*
*நாம் பலி!*
*தமிழன்,*
*ஆங்கிலத்தின் பிரதிநிதி;*
*நாம் பலி!*
*தமிழா!*
*எங்கே*
*தமிழின் பிரதிநிதி;*
*இது நம்வழி!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிக்கையில் சொன்னவாறு நீதிபதி மோகன் அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள்

முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள்

முனைவர் தமிழண்ணல் அவர்கள்

புலவர் இரா. இளங்குமரன் அவர்கள்.

ஆகியோர் குழுவின் இதர உறுப்பினர்கள். 1999 மே 20, 21, 22 தேதிகளில் தான் இக்குழு கருத்தறிந்தது. சொன்னபடி மே 31 க்குள் அறிக்கைப் பெறப்படவில்லை. இவ்வாண்டு செயலுக்கும் கொண்டுவரப்படவில்லை. என்றாலும் தாமதித்தாவது அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அறிக்கை இப்போதுள்ள நிலையிலிருந்து மேம்பட்ட நிலைக்கு பரிந்துரைத்திருப்பதாக அறியப்படுகிறது.

சான்றோர் பேரவை முன்னெடுத்த இந்தப் போராட்டத்தை ஆதரித்து ம.தி.மு.க., பா.ம.க., த.மா.கா. உள்ளிட்ட சில கட்சிகள் அறிக்கை விட்டிருப்பது போராட்டத்துக்கு ஆதரவு என்ற அளவில் சரியானது தான். என்றாலும் தமிழ்ச்சமுதாயத்தின் தலையாய பிரச்சனை என்ற அளவில் அவர்களின் இயக்கங்களே போராடி நாடு கொந்தளிக்கச் செய்திருக்க வேண்டாமா? ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்தவர்களின் பிரச்சனைக்கு போராடுவோருக்கு ஆதரவு என்பது போல பார்ப்பது பொருத்தமாய் இல்லை; போதுமானதாய் இல்லை.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று 1995 -இல் 8-வது உலகத்தமிழ் மாநாட்டில் முழங்கிய செல்வி செயலலிதா அவர்களின் அ.தி.மு.க. இதில் மவுனம் காத்தது - ஆதரவாய் அறிக்கை கூட விடாதது வேதனையானது தான்.

இந்தப் போராட்டம், குறிப்பிட்ட வரம்போடு குழுவமைக்க காரணமாய் இருந்துள்ளது. 1-5 வகுப்புவரை தமிழில் தான் என்ற தெளிவான முடிவை வாங்கி குழுவைப் போட்டு பரிந்துரை அறிக்கை வழங்க காரணமாய் இருக்கிறது. மேலும் தமிழியக்கங்கள் என்ற அளவில் தமிழியக்கங்களை ஒன்று திரட்டி போராட வைத்திருக்கிறது. சமுதாய அளவில் பிரச்சனையை தெளிவாகவும் அழுத்தமாகவும் கொண்டு சென்றிருக்கிறது. அத்து மீறி ஆங்கிலத்தை ஆதரித்தோருக்கு எச்சரிக்கையாய் அமைந்திருக்கிறது. இந்த அளவில் இது ஒரு சாதிப்பு தான். இது பாராட்டுக்குரியதே. மறுபக்கம் உறுதிமொழி வாங்கியபடி இவ்வாண்டே செயலுக்கு கொண்டுவரப்படவில்லை தான். இன்னும் எட்ட வேண்டிய இலக்குகள் ஏராளம் தான். இது தமிழியக்கங்களுக்கு மேலும் பல வேலைகள் இருப்பதை உறுதி செய்கிறது.

போராட்டத்தில் உறுதியுடன் நின்று முத்தமிழறிஞருடைய நிலையை வெளிப்படச் செய்திருந்தாலும் இருமொழித்திட்டத்தை திராவிட இயக்கங்களும் ஒருமொழித்திட்டத்தை சான்றோர் பேரவை உள்ளிட்ட பல இயக்கங்களும் கொண்டிருந்தாலும் திராவிட இயக்கங்களின் மீதான விமர்சனம் போதுமானதாய் இருக்கவில்லை.

சென்னை மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயரிட்டது, அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடச் செய்தது, தமிழ் வழிக்கல்வியும் தமிழ்ப்பாடநூல் நிறுவனமும் உருவாக்கி ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டது, வள்ளுவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்டம் கட்டியது, 2-ஆம் உலகத்தமிழ் மாநாடு நடத்தியது, உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கியது, தமிழில் அருச்சனை செய்ய வழி கண்டது, தலைமைச் செயலகம் என தமிழில் பெயரிட்டது, தமிழ்ப் பண்பாடு, ஆட்சிமொழித் துறையை உருவாக்கியது, மெட்ராஸ் என்பதை சென்னை என்றாக்கியது, தமிழ் இலக்கண நூல் மீண்டும் உருவாக்கிட குழுவமைத்து ஆணையிட்டது, தமிழ் இணைய மாநாடு - 99 நடத்தியது, என்று தி.மு.க. அரசு தமிழுக்குச் செய்ததைப் பட்டியலிடுகிறது முரசொலி. மேலும் பலருக்கு சிலை வைத்ததையும் பரிசு தந்ததையும் குறிப்பிடுகிறது.

இந்தப்பட்டியலில் வராத, உந்துகளில் தமிழ் எண்களை போட வழி செய்தது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தேறவேண்டும் என்றிருந்ததை தமிழ் (அ) ஆங்கிலம் என்றாக்கியது என்பதையும் சேர்த்துக் கொள்கிறோம். அரசுப் பணித் தேர்வில் ஆங்கிலம் இல்லாமல் தமிழ் மூலம் மட்டுமே தேர்வு எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்க முக்கிய முடிவு தான்.

ஒருவரையோ (அ) ஒரு இயக்கத்தையோ அறிய அவருடைய அல்லது அந்த இயக்கத்தினுடைய கடந்த காலத்தைத் திரும்பிப்பார்ப்பது தான் சரியானது.

உலகில் 8.83% மட்டுமே ஆங்கிலம் பேசுவோர் இருக்க உலகம் முழுவதும் ஆங்கிலம் இருப்பதுபோல பேசி நம்பச் செய்து தமிழர்களின் மனங்களைப் பாழாக்கியது. இருமொழித் திட்டத்தை அறிவித்து ஆங்கிலத்தை வளரச் செய்தது,

சுமார் $1^1/_2$ ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் அவர்களின் மனசாட்சியான முரசொலிமாறன் அவர்கள் ஆங்கிலத்தை விட்டுவிட்டால் காட்டுமிராண்டி காலத்துக்குப் போய் விடுவோம் என்றது, ஒருநாள் அடையாளப்பட்டினிப் போராட்ட நேரத்தில் தி.மு.க. உறுப்பினர் ராஜ்குமார் மன்றாடியார் சட்டமன்றத்தில் ஆங்கிலத்தில் பேசியது, தமிழமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களும் ஒரு த.மா.கா சட்டமன்ற உறுப்பினரும் குறுக்கிட்டபோதும் ஆங்கிலத்திலேயே பேசியது, அதை தி.மு.கழகம் கண்டு கொள்ளாதிருந்தது, கடந்த ஆண்டு தெலுங்கு வழி ஆசிரியர் படிப்புக்கு தானாக 80 இடங்களைக் கொண்டு வந்த கலைஞர், போராடினாலும் தமிழுக்குச் செய்ய மறுப்பது, தனது அமைச்சர்களைக் கூட பெயரில் ஆங்கில முன்னெழுத்து K. N. நேரு, வீரபாண்டி S. ஆறுமுகம், N.K.K. பெரியசாமி என்றிருப்பதை மாத்தும்படி செய்யாதிருப்பது, SUN TV என்று ஆங்கிலத்தில் இருப்பது அந்த ஆங்கிலப்பெயரை அழிக்கப்போன பா.ம.க. தொண்டரை அடித்து நொறுக்கியது, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் ஆங்கில வழிப்பாட வகுப்புகளை எத்தனை வேண்டுமானாலும் திறந்துகொள்ளலாம் என்று அறிவித்தது, தமிழில் தொழிற்கல்வியை கொண்டு வருவதாகச் சொல்லி 700 க்கு அதிகமானவர்களிடம் விண்ணப்பங்களை வாங்கிவிட்டு தொழில்நுட்பக்குழு அனுமதிக்கவில்லை என்று சொல்லி ஒதுங்கிக்கொண்டது, 3-12-96 -இல் மூப்பனார் குடும்ப திருமண வரவேற்பில் திரு. P.T.R. பழனிவேல்ராசன் அவர்கள் மருத்துவம், பொறியியல் எதுவும் தமிழில் கற்பிக்கக்கூடாது என்று பேசியது திமு.க. தலைவர் கலைஞர் அவர்களே வாழ்வுக்கு தமிழ் வசதிக்கு ஆங்கிலம் என்று பொதுப்படையாகப் பேசியது, ஆங்கில வழி மாணவர்களின் விழுக்காட்டை 15 ஆண்டுகளில் (1980-1995) 7.80 -லிருந்து 15.00 (இருமடங்கு) என்றாக்கியது என்று ஆங்கிலத்துக்கு ஆதரவான தமிழுக்கு எதிரான செயல்களையும் நாம் பட்டியலிடுகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அ.தி.மு.க. ஆட்சியில் திரு. எம்.ஜி.ஆர். காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவியது, தமிழ்ச்சங்கம் நிறுவியது, 5-வது உலகத்தமிழ் மாநாடு நடத்தியது, செல்வி செயலலிதா ஆட்சி காலத்தில் 8-வது உலகத்தமிழ் மாநாடு நடத்தியது என்று அ.தி.மு.க.வினர் தமிழ்த் தொண்டுகளையும் பட்டியலிடலாம். ஆனால், எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1-ஆம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் என்று அறிவித்தது, செல்வி செயலலிதா ஆட்சியில் (1991-96) ஆங்கிலப்பள்ளிகளுக்குத் தனி ஆணையம் அமைப்பது என்று முடிவெடுத்தது. தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் ஆங்கிலத்தில் உரையாட வேண்டும் என்று வதை அறிவிப்பு செய்தது என்று அ.தி.மு.க. வின் ஆங்கில ஆதரவு தமிழ் விரோத போக்கையும் நாம் மறந்துவிட முடியாது.

6-10-99 ஜீ. வி இதழிலே வந்த சேதி. நீதிபதி மோகன் குழு அறிக்கை மீதான அமைச்சரவை விவாதத்தில் தி.மு.க. அமைச்சர்களே தமிழ் வழிக்கல்விக்கு எதிராக முழங்கி இருக்கிறார்கள். திரு. துரைமுருகன், திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. ஆலடி அருணா ஆகியோர் தமிழ்வழிக் கல்விக்கு எதிராய் பேசியதாகவும் திரு. தமிழ்க்குடிமகன் மட்டும் தமிழுக்கு ஆதரவாக பல ஆதாரங்களைக் காட்டிப் பேசினார் என்றும் அறிவிக்கிறது.

தமிழினத்தலைவர், இப்போது இருக்கும் பாடங்களைக் கட்டாயத் தமிழுக்குக் கொண்டுவராமல், ஏதேனும் இரண்டு பாடங்களைப் புதிதாக அறிமுகப்படுத்தி அதை தமிழ் மூலம் கற்பித்தால் பிரச்சனை இருக்காது என்று சொன்னதாய் சேதி. இதை தமிழ்க்குடிமகன் மறுத்துப் பேசியிருக்கிறார். இந்த ஆங்கில ஆதிக்க தி.மு.க. விடமா தமிழுக்கு ஆதரவான நிலை வந்துவிடப்போகிறது? அயல்நாட்டு வேலைவாய்ப்புத் துறையை உருவாக்கி அதற்கு அமைச்சர் துரைமுருகன் அவர்களை அமைச்சராக்கி ஆண்டுக்கு 5 லட்சம் பேருக்கு ஆங்கிலம் அறிந்தவர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாங்கித்தர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். வெறும் வாயை மெல்லுவதல்ல; செய்து காட்ட வேண்டும். பேட்டையிலே தமிழர்களாக நடிப்பதும் கோட்டையிலே ஆங்கிலேயர்களாக நடப்பதும் தமிழருக்கு எதிரானவை.

பேச்சிலே தமிழராக இருப்பதும் ஆட்சியில் ஆங்கிலேயராக இருப்பதும் தமிழுக்கு எதிரானவை. பொதுநலத்தில் போலியாய் நடிப்பதும் தன்னலத்தில் குறியாய் இருப்பதும் தமிழர் மேம்பாட்டுக்கு உலை வைக்கும்.

அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ்ப் பாடமொழியாகும். அடுத்த வருடம் சர்க்கார் கல்லூரிகளிலே தமிழ் பாடமொழியாக இருக்கும் என்பது மட்டுமல்ல. ஆங்கிலப் பாடப்பிரிவு அகற்றப்படும் என்று 23-1-1968 -இல் தமிழக முதல்வர் தி.மு.க. தலைவர் அண்ணா சட்டமன்றத்தில் அறிவித்தாரே அது என்ன ஆனது என்று இன்றைய முதல்வர் கலைஞர் தான் சொல்ல வேண்டும். இது பேச்சோடு நின்றுவிட்டது தான்.

1967-க்கு பிறகுதான் ஆங்கிலம் தமிழ்நாட்டின் பள்ளிகளில் ஆட்சி செய்யத் தொடங்கியது என்று 100 தமிழாதரவாளர்கள் போராட்டத்தைக் கைவிடக்கோ மூப்பனார் விட்ட அறிக்கை தெரிவிக்கிறது. எது எதுக்கோ பதில் சொல்லும் திராவிடக் கட்சிகள் இதைக் கண்டு மவுனம் காத்தது வேடிக்கை தான். தமிழில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிற்கல்வி தற்கொலைக்குச் சமம் என்ற தமிழுக்கு எதிரான கட்டுரைக்கு மூப்பனார் கட்சி பரிசு வழங்கியதும் அதை மறுத்து 'தமிழ் - தமிழரை வஞ்சிப்போர்' என்று நான் ஒரு சிறு நூல் வெளியிட்டதும் தனிக் கதை.

*எங்கள் தலைமைகள்*
*விவரங்களால் வந்ததைவிட*
*விளம்பரங்களால் தான்*
*அதிகம்!*

*எங்கள் தலைவர்கள்*
*அறிவால் வளர்ந்ததைவிட*
*ஆர்ப்பாட்டத்தால் தான்*
*பெரிதும்!*

*பிரச்சனைகளைப் பேசியதால்*
*மக்கள் பிரதிநிதி!*
*பிரச்சனைகளைத் தீர்க்காததால்*
*அது தான்*
*தீப்பிழம்பு நதி!*

*இங்கே,*
*கட்சி மாறினாலும்*
*ஆட்சி மாறினாலும்*
*பல கட்சிகள் தோன்றினாலும்*
*தமிழ் - தமிழரின்*
*அவலம் மாறவில்லை.*

11-6-99 -இல் தினமணியில் வந்தச்சேதி உள்ளத்தை குமுறச் செய்வது.

"தஞ்சாவூரைச் சேர்ந்தவர் டாக்டர் எஸ். ஜெயசேகர். இவர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மேற்படிப்பு (எம்.டி) தேர்வு எழுதினார். தேர்வுகளில் சிலவற்றை தமிழிலும் சிலவற்றை ஆங்கிலத்திலும் எழுதினார். மேற்கொண்டு சில தேர்வுகளை எழுத அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தேர்வுகளில் அவர் தோல்வி அடைந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தமிழில் தேர்வு எழுதியதால் தான் நான் தேர்ச்சியடையவில்லை என்று கூறியுள்ளனர். தமிழ் தெரிந்த டாக்டர்களைக் கொண்டு எனது விடைத்தாள்களைத் திருத்தச் சொல்ல வேண்டும். நான் தமிழில் பல மருத்துவ நூல்களை எழுதி இருக்கிறேன்.

எம்.டி தேர்வுக்கான வாய்மொழித் தேர்வை மீண்டும் நடத்துமாறு தஞ்சாவூர் மருத்துவர் கல்லூரி முதல்வருக்கு உத்திரவிடவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்."

இப்போது தமிழ்நாட்டுக்கு தமிழாய்ந்த தலைமகனார் கலைஞர் தான் முதலமைச்சர், தமிழ் வாஞ்சை மிக்க, தானே விரும்பி தமிழில் மருத்துவ நூல்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதிய ஒரு மருத்துவர் தன் எம்.டி தேர்வை தமிழில் எழுதியதால் தான் தேர்ச்சி அடையவில்லை என்று அறிவிக்கிறார்கள் என்றால் இது தமிழ்நாடா ? தூர்தர்ஸன் என்று தொலைக்காட்சிக்கு இந்திய அரசு பெயரிட்டால் தமிழ்நாடு முழுவதும் போராடும் தி.மு.க. தான் SUN TV என்று வைத்துக் கொள்ளுகிறது.

தமிழ், தமிழ் என்று பேசும் தி.மு.க. ஆட்சியில் மருத்துவ மேல்படிப்புக்காக தமிழில் தேர்வெழுதினால் ஒழித்துக் கட்டப்படுகிறது. தனக்கு படிப்பு வழியில் பாதிப்பு ஏற்பட்டாலும் தமிழுக்காக நின்று போராடி வரும் மருத்துவர் பாராட்டுக்குரியவர். அவருடைய இந்தப் போராட்டத்தின் மூலம் பலரது தமிழ் வேடம் கலைகிறது.

*'நீலி பேச்சி நெலயாவாது*
*நீர கடஞ்சா மோராவாது'* - என்பது

என்னுடைய தாய் அடிக்கடி சொல்லும் பாமரத் தமிழர்களின் பட்டறிவு முத்து! நீரைக் கடைந்தால் மோராவாதது போல வெறும் பேச்சு செயலாவாது என்பது வெளிப்படை.

1997 பிப்ரவரி 10-ஆம் நாளன்று வேலூர் பொறியியல் கல்லூரி முதலாமாண்டு மாணவர் திரு. கலியபெருமாள் ஆங்கில வழிக் கல்வியில் தன்னால் படிக்க முடியவில்லை என எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்பது சேதி. இந்திய தேசியக் கட்சிகளும் மத்திய அரசும் தூக்கிப் பிடிக்கும் இந்தித் திணிப்பால் உயிரிழந்த தமிழர் பலர். ஆனால் திராவிட இயக்கங்கள் தூக்கிப் பிடிக்கும் ஆங்கிலத்தால் உயிரிழந்த மாணவர் திரு. கலியபெருமாள் பிற மொழிப்போராளிகளைப் போல இவரையும் மொழிப்போர்தியாகி என்று அறிவித்து அவருடைய குடும்பத்துக்கும் பிற மொழிப்போர் தியாகிகளின் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகளைச் செய்ய வேண்டும். இதோடு நில்லாமல் எல்லா படிப்புகளையும் தமிழில் கொண்டு வர பாடுபடவேண்டும்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று முழங்குவது செயலில் தமிழுக்கு தேவையானதைச் செய்யாமல் விடுவது, இந்தி எதிர்ப்பை உருவாக்கி, தமிழுக்கு என்று தமிழர்களை உயிர்விடச் செய்வது, ஆனால் தமிழுக்கு எதுவும் செய்யாமல் விடுவது, ஆங்கிலத்தை விட்டால் இந்தி வந்துவிடும், ஆங்கிலம் உலகமொழி என்று சொல்லி மனதில் ஆங்கில ஆதரவு நம்பிக்கையை உருவாக்குவது தமிழ் ஆட்சிமொழிச்சட்டம் போட்டாலும் செயலுக்கு கொண்டுவர முடியாமல் விடுவது தமிழ்நாட்டரசு பள்ளிகளில் இந்தியை நீக்கிவிட்டால் இந்தியை ஒழித்துவிட்டதாக சொல்லுவது, பிற வழியில் வருவதை தடுக்காது இருப்பது இப்படி தமிழரை திராவிடக்கட்சிகள் ஏய்த்து வருவதை அதிகத் தெளிவுடன் எடுத்துச்சொல்லி இவர்களை 'தமிழால் ஏய்க்கும் தமிழர்கள்' என்று திரு. வே. ஆனைமுத்து அவர்கள் 1983 -லேயே அம்பலப்படுத்தி இருக்கிறார். மேற்படி நூலில் எல்லா மட்டங்களிலும் தமிழே பாடமொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக மட்டும் இருக்கலாம் என்றும் சொல்லி இருப்பது சிறப்பானது.

1990 -க்குப் பின்னால் தான் தமிழுரிமைக் கூட்டமைப்பு ஒரு மொழிக்கொள்கை என்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

www.tamilarangam.net

ஆங்கிலம் 26 எழுத்துக்களைக் கொண்ட மொழி என்று பேசப்படுகிறது. அதனால் எளிதாய் இருப்பதாகப் பேசப்படுகிது. ஆங்கிலத்தில் ஒவ்வொரு எழுத்துக்கும் 4 குறிகள். அதனால் 104 எழுத்துக்கள். மேலும் உயிரெழுத்துகளுக்கு ஒவ்வொன்றுக்கும் 4 (அ) 5 ஒலிகள். இப்படிப் பல குழப்பங்களுடன் இருக்கும் ஆங்கிலத்தை தூக்கிப்பிடிப்பது கொடுமையானது.

எடுத்துக்காட்டாக,

ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் என்பது ஏமாற்று வேலை. அதில் ஒழுங்குப்படுத்தப்படாத நிலை ஏராளம்.

படித்தால் என்ன வரும்?

E+N+G+L+I+S+H = (தனி எழுத்துக்கான ஒலி) இ+என்+ஜி+எல்+ஐ+எஸ்+எச்
இ+ன்+க்+ல்+இ+ஸ்+ஹ் (சொல்லுக்குள் ஒலி)

= இயென்ஜியெலையெல்ஹ்
இன்க்லிஸ்ஹ்

= இங்க்லிஷ் ! ?

இப்படி வருவது எப்படி இங்க்லிஷ் ஆவுது? ஷ் - கு தனி எழுத்து இல்லையே! ஆங்கிலத்தில் உயிரெழுத்துக்கள் 5 என்பார்கள்.

ஐந்து எழுத்துக்களும் எப்படியெல்லாம் ஒலிக்கின்றன?

உயிரெழுத்துக்கள் உயிரை வாங்கும் எழுத்துக்களாகத்தான் இருக்கின்றன.




- abet - அbபெட் ; a = அ
- after - ஆஃப்ட(ர்) a = ஆ
- able - எய்b்ப்ல்; a = எய்
- accelarate - அஒக்செலரெய்ட் a = அ-ஒ
- alternate - ஆ-ஒல்டானெட் a = ஆ-ஒ
- ago - எgகௌ

இந்த மாதிரியான நிலை பேச்சுத் தமிழில் இல்லை. பேசுவதில் ஒலி மட்டும் தான். எழுத்துத்தமிழில் சில சிக்கல்கள் உண்டு. என்றாலும் குறைந்த அளவில் தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| பாமர வழக்கு | செந்தமிழ் வழக்கு | |
|---|---|---|
| சொல்லுவது | எழுதுவது | சொல்லுவது |
| அவம் | அகம் | அஹம் |
| பொறந்தவம் | பிறந்தகம் | பிறந்தஹம் |
| சீரவம் | சீரகம் | சீரஹம் |
| கந்தவம் | கந்தகம் | கந்தஹம் |
| அவத்தி | அகத்தி | அஹத்தி |
| மொவம் | முகம் | முஹம் |
| சொவம் | சுகம் | சுஹம் |
| ணாடவம் | நாடகம் | நாடஹம் |
| பவய் | பகை | பஹய் |
| வவய் | வகை | வஹய் |
| பொவய் | புகை | புஹய் |
| கொவய் | குகை | குஹய் |
| கடுவு | கடுகு | கடுஹு |
| மொளவு | மிளகு | மிளஹு |
| கழுவு | கழுகு | கழுஹு |
| கொடவு | குடகு | குடஹு |
| மதவு | மதகு | மகஹு |
| அடவு | அடகு | அடஹு |
| அழவு | அழகு | அழஹு |
| படவு | படகு | படஹு |
| அழவி | அழகி | அழஹி |
| ஆவும் | ஆகும் | ஆஹும் |
| மேவம் | மேகம் | மேஹம் |
| னவய் | நகை | னஹய் |
| மவன் | மகன் | மஹன் |
| வவு | வகு | வஹு |
| முருவன் | முருகன் | முருஹன் |
| கரவம் | கரகம் | கரஹம் |
| பழவு | பழகு | பழஹு |
| வத்து | வற்று | வட்று |
| மத்த | மற்ற | மட்ற |
| பெத்த | பெற்ற | பெட்ற |
| காத்து | காற்று | காட்று |
| னேத்து | நேற்று | னேட்று |
| மாத்து | மாற்று | மாட்று |
| னெத்தி | நெற்றி | னெட்றி |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடமொழிச் சொற்களை சொல்லும்போது ஒலி மாத்தாமல் சொல்வதும் குறியை மட்டும் தமிழில் போடுவதும் புலவர்களின் வழி. ஆனால், வடமொழியிலுள்ள தமிழில் இல்லாத ஒலியை தமிழிலுள்ள ஒழியாக்கி பேசுவது பாமர மக்களின் வழி. புலவர் பெருமக்கள் குறியை (எழுத்து) மாத்துவதால் அது தமிழிலுள்ள ஒலி ஆவாது.

| *வடமொழி* | *பாமர வழக்கு* | *பண்டித வழக்கு* *எழுத்து* | *ஒலிப்பு* |
|---|---|---|---|
| சbஅய் | சவய் | சபை | சbஅய் |
| மண்டbஅம் | மண்டவம் | மண்டபம் | மண்டbஅம் |
| கிரஹம் | கெரவம் | கிரகம் | கிரஹம் |
| தீவாளி | தீவாளி | தீபாவளி | தீbஆவளி |
| மஹராசி | மவராசி | மகராசி | மஹராசி |
| துரோஹம் | துரோவம் | துரோகம் | துரோஹம் |

ஒரு பள்ளியில் 1999- இல் 10-ஆம் வகுப்பு தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 133. இதில் தவறியவர்களின் எண்ணிக்கை - 57.

| | | |
|---|---|---|
| *தமிழில் தவறிவர்கள்* | - | *3* |
| *ஆங்கிலத்தில் தவறியவர்கள்* | - | *39* |
| *கணக்கில் தவறியவர்கள்* | - | *45* |
| *அறிவியலில் தவறியவர்கள்* | - | *20* |
| *சமுதாய அறிவியலில் தவறியவர்கள்* | - | *6* |

ஆங்கிலத்திலும் கணக்கிலும் அதிக மாணவர்கள் தவறி இருக்கிறார்கள். ஆங்கிலம் அன்னிய மொழியாய் இருப்பதால் அது இங்கு சமுதாய மொழியாய் இல்லை. சமுதாய மொழியாய் இல்லாத ஒன்று வகுப்பறையில் மட்டுமே சொல்லித்தரப்படும். பயன்பாடு என்ற அளவில் 1000 -ல் ஒருவருக்கு ஆங்கிலம் உதவலாம். ஆனால் தமிழ் 100 -க்கு 100 பேர்களுக்கும் உதவும்.

கணக்கில் நிறைய மாணவர்கள் தவறுகிறார்கள். இது, சில தனித்துவமான நுணுக்கங்களோடு உள்ளது. இப்போதுள்ள கணிதம் எந்த அளவில் பயனுள்ளதாய் இருக்கிறது என்று கவனிக்கப்படவேண்டும்.

தமிழில் தவறிய 3 பேர்களில்,

| | | |
|---|---|---|
| *5 பாடங்களிலும் தவறியவர்* | - | *1* |
| *4 பாடங்களில் தவறியவர்கள்* | - | *2* |

எனவே, *பிற பாடங்களில் தேறி, தமிழில் மட்டும் தவறியவர் ஒருவருமில்லை.*

*பிற பாடங்களில் தேறி, ஆங்கிலத்தில் மட்டும் தவறியவர்கள் - 8*

*பிற பாடங்களில் தேறி கணக்கில் மட்டும் தவறியவர்கள் - 12*

*பிற பாடங்களில் தேறி அறிவியலில் மட்டும் தவறியவர்கள் ஒருவருமில்லை.*

*பிற பாடங்களில் தேறி சமுதாய அறிவியலில் தவறியவர்கள் ஒருவருமில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆங்கிலத்தில் தேறுவது கட்டாயம் இல்லை என்றாலும் மேலும் 8 மாணவர்கள் தேறி இருப்பார்கள். அன்னிய ஆங்கிலத்தில் முட்டி மோதிய நேரத்தில் வேறுபாடங்களை படித்திருந்தால் மேலும் பல பேர் தேறி இருப்பார்கள். பிற பாடங்களில் தேறி ஆங்கிலத்திலும் மேலும் ஒரு பாடத்திலும் தவறியவர்கள் 20. ஆங்கிலத்தில் கட்டாயம் தேற வேண்டும் என்ற நிலை இல்லை என்றால் இந்த 20 பேர்களும் தேறும் வாய்ப்பு உண்டு.

| மதிப்பெண் அளவு | ஆளெண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் | கணக்கு | அறிவியல் | சமுதாய அறிவியல் |
| 1 - 20 | 0 | 5 | 21 | 3 | 0 |
| 21 - 40 | 6 | 51 | 41 | 29 | 22 |
| 41 - 60 | 39 | 53 | 42 | 29 | 63 |
| 61 - 80 | 70 | 23 | 22 | 52 | 41 |
| 81 - 100 | 18 | 1 | 7 | 20 | 6 |

புள்ளியியல் முறையில் கணக்கிடும் போது சில விபரங்களைப் பெறமுடியும்.

***மதிப்பெண்கள் 40 க்குள்*** வாங்கியவர்கள்,

தமிழில் 6 பேர்கள் மட்டுமே

ஆங்கிலத்தில் 56. பேர்கள்

***மதிப்பெண்கள் 41 - 60*** இல்

தமிழில் 39 பேர்கள்

ஆங்கிலத்தில் 53. பேர்கள்

***மதிப்பெண்கள் 61 - 80*** இல்

தமிழில் 70 பேர்கள்

ஆங்கிலத்தில் 23. பேர்கள்

***தமிழில் அதிகமான மதிப்பெண்கள் அதிகமானவர்கள் வாங்க முடிகிறது. ஆனால் ஆங்கிலத்தில் அந்த அளவுக்கு வாங்க முடிவதில்லை.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




த - தமிழ்
ஆ - ஆங்கிலம்
க - கணக்கு
அ - அறிவியல்
ச.அ - சமுதாய அறிவியல்

இந்த வரைபடம் எந்தெந்த பாடங்களில் எத்தனை மாணவர்கள் எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்தும் விளக்கப்படம் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1996 -ல் ஒரு பள்ளியில் 10-ஆம் வகுப்பில் தவறியவர்களின் விபரம் வகுப்பு, பாட வாரியாய் கீழே தரப்பட்டிருக்கிறது.

| பிரிவு | நிலை | தமிழ் | ஆங்கிலம் | கணக்கு | அறிவியல் | வரலாறு புவியியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| O.C | எழுதியவர் | 11 | 11 | 11 | 11 | 11 | 11 |
| | தவறியவர் | 0 | 4 | 0 | 2 | 2 | 5 |
| | தவறியவர்% | 0 | 36.36 | 0 | 18.18 | 18.18 | 45.45 |
| B.C | எழுதியவர் | 45 | 45 | 45 | 45 | 45 | 45 |
| | தவறியவர் | 2 | 12 | 8 | 11 | 9 | 15 |
| | தவறியவர்% | 4.44 | 26.66 | 17.77 | 24.44 | 20.00 | 33.33 |
| MBC | எழுதியவர் | 68 | 68 | 68 | 68 | 68 | 68 |
| | தவறியவர் | 12 | 31 | 21 | 27 | 27 | 41 |
| | தவறியவர்% | 17.64 | 45.58 | 30.88 | 39.70 | 39.70 | 60.29 |
| SC & ST | எழுதியவர் | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| | தவறியவர் | 2 | 7 | 5 | 7 | 6 | 10 |
| | தவறியவர்% | 13.33 | 46.66 | 33.33 | 46.66 | 40.00 | 66.66 |
| எல்லா பிரிவும் | எழுதியவர் | 139 | 139 | 139 | 139 | 139 | 139 |
| | தவறியவர் | 16 | 54 | 34 | 45 | 44 | 71 |
| | தவறியவர்% | 11.51 | 38.84 | 24.46 | 32.37 | 31.65 | 51.07 |

***தவறியவர்கள் சதவீதம்***

| *வகுப்பு* | | *தமிழில்* | *ஆங்கிலத்தில்* |
|---|---|---|---|
| O.C | - | 0.00 | 36.36 |
| B.C | - | 4.44 | 26.66 |
| MBC | - | 17.64 | 45.58 |
| SC&ST | - | 13.33 | 46.66 |
| எல்லா பிரிவும் | - | 11.51 | 38.84 |

தமிழும் ஆங்கிலமும் மொழிப்பாடங்கள். மொழிப்பாடங்கள் என்ற அடிப்படைபோடு பார்க்கும்போது தமிழைவிட ஆங்கிலத்தில் தவறியவர்கள் மிக அதிகம். ஆங்கிலம் எல்லாப்பிரிவு மாணவர்களையும் பாதிக்கிறது. ஆங்கிலத்தில் கட்டாயம் தேற வேண்டும் என்ற நிலையை நீக்க எல்லா பிரிவினரும் ஒன்றுபட வேண்டியதாய் இருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழ் எல்லா மட்டத்திலும் வந்தாக வேண்டியதாய் இருக்கிறது. ஆங்கிலம், தமிழ்நாட்டில் ஆதிக்கத்தில் இருக்கிறது.

இந்த நிலையில் மார்க்ஸிய அறிஞர் எஸ்.வி. இராஜதுரை அவர்கள் 'தமிழால் ஒன்றுபடுவோம் என்பது போலியானது' என்று பிப்-1999 தலித்முரசு போட்டியில் சொல்லி இருக்கிறார். வேறு நோக்கங்களுக்காக தமிழ் சம்மந்தமான நடவடிக்கைகளில் - தமிழர் ஒருமைப்பாட்டில் - எதிராய் இருப்பது தவறானது. திரு. எஸ். வி. ராஜதுரை போன்றவர்கள் பிரச்சனைகளை தனித்தனியாய் பார்ப்பது நல்லது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தீயில் வெந்த தமிழ்ப்புலிகள்' என்ற பெயரில் திரு. விடுதலை அவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மாண்டுபோனவர்களின் வரலாற்றை எழுதி இருக்கிறார்.

'யார் இவர்கள்? என்று கேட்டுக் கொண்டு

இவர்கள்......

திராவிட இயக்க அரசியல் வெற்றியின்கீழ் புதைந்துபோன கல்லறைகள்.

திராவிட இயக்க கொடிமரத்தின் வேர்கள்.

சில கட்டடங்களின் பெயர்களாகவும், தேர்தல் நேரத்துப் பிரச்சாரக் கருவியாகவும் நிலைத்து விட்டவர்கள்' என்று தான் சொல்லுகிறார்.

யார் அவர்கள்? என்ன செய்தார்கள். என்று பார்க்கலாமே!

**1938** -இல் இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த இந்தி திணிப்பை எதிர்த்து **1939** -இல் பள்ளிகளுக்கு முன்னர் நடந்த மறியலில் கைதாகி சிறை சென்று மாண்டு போனவர்கள் ***தாளமுத்தும் நடராசனும்***

**1989** -இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு சென்னையில் எழுப்பப்பட்ட மிகப்பெரிய அரசு கட்டிடத்திற்கு அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் தாளமுத்து நடராசன் பெயர் சூட்டப்பட்டது என்கிறார்.

**1963** -இல் பக்தவச்சலம் அவர்கள் இந்தியைத் திணித்த போது, **25-1-64** -இல் திருச்சி ரயில் நிலையத்தில் தனது உடலில் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்துக் கொண்டு 'தமிழ் வாழ்க - இந்தி ஒழிக' என்று கத்தியவாறு கருகிப் போனவர் ***கீழப்பழுவூர் சின்னச்சாமி.***

பெற்றோருக்கு திருமணமாகி **23** ஆண்டுகள் கழித்துப் பிறந்த ஒரே மகன், **27** வயதே நிரம்பிய இளைஞர், தன்னுடைய மனைவியையும் ஒரே மகளையும் விட்டுவிட்டு தீ குளித்து மாண்டு போன சின்னச்சாமி தீ குளிக்கும் முன் **24-1-64** அன்று பள்ளிப் பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கி தமிழ் வாழப் பாடுபடுங்கள் என்று உணர்ச்சி பொங்க கூறிக்கொண்டிருந்தவர், 'தமிழ் வாழ வேண்டும் என்று நான் சாகிறேன்' என்று எழுதி வைத்து விட்டு இறந்து போயிருக்கிறார்.

"சின்னச்சாமி இறந்த செய்தி அறிந்த எம்.ஜி.ஆர். **5,000** ரூபாய் கொடுத்தனுப்பி, 'நான் **5,000** ரூபாய் கொடுத்துவிட்டதால் சின்னச்சாமியின் உயிருக்கு இது தான் மதிப்பு என்று எண்ணிவிடக்கூடாது' என்று கடிதமும் எழுதியுள்ளார்."

'சின்னச்சாமியின் மகள் திராவிடச்செல்வியின் திருமணத்தை நடத்தி வைத்த கலைஞர் அவர்கள் திருமணத்தின்போது **5,000** ரூபாய் நிதியும் கொடுத்தார். அ.தி.மு.க. **21**-ஆம் ஆண்டு தொடக்கவிழாவில் செல்வி செயலலிதா **50** ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'சின்னச்சாமியைப் போல் ஒரு பத்துத் தமிழனாவது உயிர் நீத்தால்தான் நம் தமிழுக்கு விமோசனம் கிடைக்கும் இந்தி ஆதிக்கம் ஒழியும்!' என்று பேசி வந்த ***கோடம்பாக்கம் சிவலிங்கம்*** **25-1-1965** -ல் தீ குளித்து மாண்டு போனார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தி திணிப்பைக் கண்டித்து மத்திய மாநில அரசுகளுக்கு கடிதங்களை அனுப்பிவிட்டு 'தமிழ் வாழ்க - இந்தி ஒழிக, தமிழுக்காக உயிரைக் கொடுக்கிறேன்!' என்று அண்ணா, நாவலர், மதியழகன் ஆகியோருக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு தனக்கு தீயிட்டுக் கொண்டு இறந்து போனவர் ***விருகம்பாக்கம் அரங்கநாதன்.*** சென்னையில் அரங்கநாதன் பெயரில் சுரங்கப்பாதை ஒன்று இருக்கிறது.

**27-1-1965** -இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தின் மீது காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோன மாணவர் சிவகங்கை இராசேந்திரன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் இராசேந்திரனுக்கு சிலை எழுப்பி இருக்கிறார்கள்.

**1965** பிப்ரவரி மாதம் 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று எழுதி வைத்துவிட்டு நஞ்சுண்டு இறந்து போனவர் பி.எஸ்.ஜி. கல்லூரி மாணவர் ***பீளமேடு தண்டபாணி.***

பீளமேடு மாணவர்கள் தண்டபாணியின் குடும்பத்துக்கு 10,000 ரூபாய் நிதி திரட்டி தந்தனர்.

**1965** பிப்ரவரி மாதம் ஒரு வியாழக்கிழமை சத்தியமங்கலத்தில் தன் உடலின் மீது பெட்ரோலை ஊற்றிக்கொண்டு 'தமிழ் வாழ்க - இந்தி ஒழிக' என்று முழங்கியவாறு எரிந்து போனவர் ***சத்தியமங்கலம் முத்து.***

**1966** -இல் தி.மு.க. மாநாட்டில் முத்துவின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டில் மதுரையில் நடந்த தி.மு.க. மாநாட்டு அரங்கிற்கு சத்தியமங்கலம் முத்துவின் பெயர் சூட்டப்பட்டது.

'இந்தியை திணிக்க விரும்பும் அரசிடம் வேலை செய்யக் கூடாது என்று முடிவெடுத்து முதலமைச்சர் பக்தவச்சலம், பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருக்குக் கண்டனக் கடிதங்களும் அண்ணா அவர்களுக்கும் கலைஞர் அவர்களுக்கும் தமிழைக் காக்க முயற்சி செய்யுங்கள் என்று வேண்டுகோள் கடிதங்களும் எழுதிவிட்டு, **11-2-65** அன்று ஏராளமான தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டு தன் உடலில் உடுத்தி இருந்த உடையோடு மேலும் பல வேட்டிகளை உடம்பில் சுற்றி தன் உடலிலும் உடைகளிலும் மண்ணெண்ணை ஊற்றி தீயிட்டுக் கொண்டு, தமிழைக் காப்பாற்ற முயலுங்கள் என்று மக்களிடம் சொல்லிவிட்டு இறந்து போனவர் ***அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன்.***

**25-1-80** இல் மொழிப்போர் தியாகிகள் நாளில் ஆசிரியர் வீரப்பனுக்கும், விராலிமலை சண்முகத்திற்கும் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டது. பேரா.அன்பழகன் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தார்.

கோயில் மண்டபச் சுவர்கள், சத்திரங்களின் சுவர்கள் என்று எல்லா இடங்களிலும் 'இந்தி ஒழிக தமிழ் வாழ்க' என்று எழுதி வைத்துக் கொண்டிருந்த ***கீரனூர் முத்து,*** முதல்வர் பக்தவச்சலத்திற்கு இந்தித் திணிப்பை நிறுத்துங்கள் என்றும் அண்ணா அவர்களுக்கு தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள் என்றும் கடிதங்கள் எழுதி மடியில் வைத்துக் கொண்டு நஞ்சுண்டு மாண்டுபோனார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1967** -இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் முத்து இறந்துகிடந்த இடத்தில் சீரணி அரங்கம் ஒன்று கட்டப்பட்டது. அதற்கு தியாகி முத்து சீரணி அரங்கு என்று பெயர் சூட்டப்பட்டது.

'தமிழர் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டாயா? நீ கலந்து கொண்டிருந்தால் நான் மனதார வாழ்த்துவேன். நிராகரித்து ஒதுக்கி இருந்தால் மிகவும் வேதனை அடைவேன், இந்தி மொழியானாலும் சரி, வேறு எந்த மொழியானாலும் மக்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியதே. ஆனால், நம் மொழியை அழித்து அது ஆட்சி செய்ய வந்தால் யாரும் ஒப்ப முடியாது' என்று உறவினருக்கு கடிதம் எழுதிவிட்டு

'இரண்டு இரயில் பெட்டிகள் சாம்பலானால் திரும்பப் பெறலாம். இரண்டு மாணவர்களின் உயிர் போனால் திரும்பப் பெற முடியுமா? மாணவர்களே போராட்டத்தைக் கைவிடுங்கள்' என்று சொன்ன அண்ணாவுக்கு.

'தி.மு.க. தலைவர் அவர்களே நீங்கள் தமிழைக் காக்கத் தவறிவிட்டீர்கள். பக்தவச்சலம் ஆட்சிக்குப் பயந்துவிட்டீர்கள். இன்னும் பயம் வேண்டுமா? அய்யா, துரோகி பக்தவச்சலத்தின் ஆட்சியில் தமிழ் தழைக்க வழியின்றி போய்விட்டது. தி.மு.க.வின் தொண்டர்களையும் தமிழ்த்தாயின் புதல்வர்களையும் பாதுகாப்புச் சட்டம் என்ற போர்வையில் மூடிமறைத்து விட்டீர்கள். தமிழ்த்தாயின் பாதம் இரத்தத்தால் கறை படிந்துள்ளது. அண்ணா நீங்கள் ஆணையிட்டால் தமிழகம் தங்கள் ஆணையைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறது. சும்மா இருந்து விடாதீர்கள்' என்று அண்ணாவுக்கு கடிதம் எழுதிவிட்டு நஞ்சுண்டு மாண்டு போனவர் ***விராலிமலை சண்முகம்.***

**8-4-66** அன்று விராலிமலையில் நிறுவப்பட்ட சண்முகம் படிப்பகத்தை அறிஞர் அண்ணா திறந்து வைத்தார்கள்.

**19-8-1979** -இல் புதுக்கோட்டையில் நடந்த தி.மு.க. பொதுக்கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் சண்முகம் குடும்பத்துக்கு **2** ஆயிரம் ரூபாய் வழங்கினார்.

**25-1-1980** -இல் மணப்பாறையில் மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளின் போது சண்முகம் நினைவுச்சின்னத்தை தி.மு.க. பொதுச்செயலாளர் பேரா. க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

**7-8-81** அன்று சண்முகத்தின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட கல்லறையை முன்னாள் அமைச்சர் அன்பில் தருமலிங்கம் திறந்து வைத்தார்.

இப்போதும் விராலிமலை சண்முகத்தின் அண்ணார் மாணிக்கம் **1965** மொழிப்போர் தியாகிகள் சங்கம் அமைத்து செயல்பட்டு வருகிறார் என்று திரு. விடுதலை அவர்கள் குறிப்பிடுகிறார்.

மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இந்தித் திணிப்பையும், காங்கிரஸ் தலைவர்களின் ஆணவத்தையும், தமிழ்நாட்டுத் தெருக்களில் ராணுவம் ஆயுதங்களுடன் நடமாடுவதையும் கண்டித்து **15-3-65** -இல் கல்லூரி வளாகத்திலேயே தன்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துக் கொண்டு மாண்டு போனார், ***மயிலாடுதுறை சாரங்கபாணி.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியை எதிர்த்து உயிர்தியாகம் செய்த வீரர்களின் மண்ணில் தெருவுக்குத் தெரு எம் தமிழ்க் குழந்தைகளின் மூளையை நசுக்கும் ஆங்கில நர்சரிப்பள்ளிகள் ஆட்டம் போடுகின்றனவே? நாம் என்ன செய்தோம் என்று கேட்கிறார் திராவிட இயக்கத்தின் வழிவந்த நூலாசிரியர்.

மொழிப்போர் தியாகிகள் எழுதிய கடிதங்களையும் அவர்கள் வாங்கிப் படித்த ஏடுகளையும் அவர்கள் கடிதம் எழுதிய தலைவர்களையும் பார்க்கிறபோது, தி.மு.க. தமிழ் மக்களின் உள்ளங்களில் தமிழ் வாஞ்சை ஏற்படக் காரணமாய் இருந்ததை அறிய முடிகிறது.

காங்கிரஸ் கட்சி இந்தியைத் திணித்தபோது எதிர்த்துப் போராட்டம் நடக்க திராவிட இயக்கங்கள் காரணமாய் இருந்தது புரிகிறது.

நினைவு நாள் கொண்டாடுவது, கட்டிடங்களுக்கு மொழிப்போர் தியாகிகளின் பெயர்களை வைப்பது, அவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வது, இரங்கல் தீர்மானம் போடுவது, எல்லாம் தியாகிகளுக்குச் செய்யும் மரியாதைகளாக இருக்கிறது.

ஆனால்,

'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்றும்,

'தமிழ் வாழ வேண்டும் என்று சாகிறேன்' என்றும்

'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக - தமிழுக்காக உயிரைக் கொடுக்கிறேன்' என்றும்

'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்றும்

'தமிழைக் காப்பாற்ற முயலுங்கள்' என்றும்

'இந்தித்திணிப்பை நிறுத்துங்கள், தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள்' என்றும்

'இந்தி மொழியானாலும் சரி, வேறு எந்த மொழியானாலும் மக்களாகிய நாம் அறிய வேண்டியதே. ஆனால் நம்மொழியை அழித்து அது ஆட்சி செய்ய வந்தால் யாரும் ஒப்ப முடியாது' என்றும் முழங்கிவிட்டு தமிழுக்காக மாண்டுபோன தியாகிகளின் தமிழ்க்காப்பு லட்சியங்கள் நிறைவேறி இருக்கின்றனவா? 1967 முதல் இன்று வரை (1999) திராவிடக் கட்சிகளின் ஆட்சி தானே?

'மனித உணர்ச்சியும், மான உணர்ச்சியும் போய் இந்த நாட்டில் எவனும் அரசியல் மேதையாய் உலவ வேண்டிய அவசியமில்லை. இந்தி ஏகாதிபத்தியத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதிலே நமக்கு உயிர் பெரிதல்ல! இந்தக் காலத்திலே வாழ்ந்திருந்த தமிழர்கள் கோட்டை விட்டுவிட்டார்கள் என்று பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வருகின்ற மக்கள் நம்மீது பழி சுமத்தக்கூடிய நிலையிலே நாம் இந்த நேரத்தில் தவறு செய்துவிடக்கூடாது.

-ஈ. வே. கி. சம்பத்து

13-10-1957 -இல் உரை என்றுள்ள விடுதலை அவர்களின் நூலில்.

இப்படி எல்லாம் கருத்தளவில் சரியாகப் பேசியவர், பின்னாளில் தி.மு.கழகத்துக்குள் வந்த பிரச்சனையால் தனிக்கட்சித் தொடங்கி, கடைசியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியைத் திணித்தக் காங்கிரஸ் கட்சிக்கே போய்விட்டார் என்பது நடப்பு!

'சொல்லின் செல்வர் என்று கழகத்தவரால் பாராட்டப்பட்ட ஈ. வி. கே. சம்பத்து அண்ணா மீதும் கழகத்தின் மீதும் புழுதியை வாரித் தூற்றிவிட்டு கட்சியை விட்டு வெளியேறினார்.

அந்த துரோகியை மாலைமணி துரத்தி துரத்தி அடித்து வீழ்த்தியது!

சம்பத்து என்ற துரோகப்பெயர் யாருக்காவது இருந்தால் அந்தப் பெயரை மாற்றி தமிழ்ப்பெயரைச் சூட்டிக் கொள்ளுங்கள்' என்று மாலைமணி வேண்டுகோள் விடுத்தது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தோழர்கள் சம்பத் என்ற பெயரை மாற்றிக் கொண்டனர் என்று ஒரு செய்தி தெரிவிக்கிறது.

22-4-63 -இல் மாலைமணி வெளியிட்டிருந்த துரோகப் பெயர் சாய்கிறது எனும் பட்டியல் கீழே தரப்படுகிறது.

## துரோகப் பெயர் சாய்கிறது!

***மாலைமணி விடுத்த அன்பு வேண்டுகோளுக்கிணங்கி துரோகப் பெயரை மாற்றிக்கொண்ட கொள்கை வீரர்கள்.***

| துரோகப் பெயர் | மறுமலர்ச்சிப் பெயர் | தந்தை அல்லது பாதுகாவ பெயர் | ஊர் | விளக்கம் |
|---|---|---|---|---|
| சம்பத் | செழியன் | முத்து தனபால் | திருச்சி | என் மகனுக்கு இனி துரோகப்பெயர் வேண்டாம். |
| " | பாண்டியன் | ஆர்.கிருஷ்ணன் | " | என் தமக்கை மகன் பெயரை மாற்றிவிட்டேன். |
| " | மனோகரன் | நடேசன் | " | என் தம்பிக்கு இனி துரோகப் பெயர் வேண்டாம். |
| " | இளங்கோ | பக. முத்து | மதுரை | துராகத்தைச் சாய்த்திடும் உங்கள் பெயரையே சூட்டுகிறேன். |
| " | நெடுஞ்செழியன் | மாணிக்கம் | " | நேர்மையின் திருஉருவை என் மகனுக்குப் பெயராக வைக்கிறேன். |
| " | கருணாநிதி | சேரன் | " | என் மகன் கழகத்தின் கருத்துக்கலையாகத் திகழ வாழ்த்துங்கள். |
| சுலோசனா | வேல்விழி | சுந்தரம் | கோவை | என் மகள் வீரத் தமிழச்சியாகத் திகழட்டும் |
| சம்பத் | அன்பழகன் | மணிமொழியார் | சேலம் | என் தம்பி பாசத் தம்பியாக வாழ வாழ்த்துங்கள் |
| " | தமிழரசன் | வேல்விழியான் | " | காட்டிக் கொடுக்கும் கயமை என் பரம்பரைக்கே வேண்டாம். |
| " | மனோகரன் | கே.வி. முத்து | ஈரோடு | துரோகத்தை துவம்சம் செய்த சிங்கப் பெயர் வாழட்டும். |
| " | இளங்கோ | கோ.தனபாலன் | மேட்டூர்... | என் தமக்கை மகனுக்கு கொள்கை வேந்தன் உங்கள் பெயரையே சூட்டுகிறேன். |
| " | பார்த்திபன் | ஆ. சிவா | " | என் தம்பிக்கு ஈரோட்டுச் சாக்கடையின் பெயர் வேண்டவே வேண்டாம். |
| " | ம. இளங்கோ | எம்.ஆர்.ராசேசுவரி | பழனி | லட்சிய முரசறையும் உங்கள் பெயரே என் பெயராகத் திகழட்டும். |

...தொடர்ச்சி 31



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | | |
|---|---|---|---|---|
| " | இளஞ்செழியன் | பி.கோவிந்தராசு | ஆனந்தபுரம் | என் மகனுக்குச் சுயநலக்காரரின் பெயர் வேண்டாம். |
| " | செழியன் | வீ. கூத்தரசன் | கோலலம்பூர் | துரோகப் பெயர் ஒழியட்டும். |
| " | முரசொலி | ஜெகந்நாதன் | " | அடிமையின் பெயரை மாற்றிக்கொண்டேன். |
| " | நெடுஞ்செழியன் | வி.கே. கந்தன் | திருவாதவூர் | எனது மகனுக்கு ஈரோட்டு எட்டப்பனின் பெயர் வேண்டாம். |
| " | மதியழகன் | எஸ்.வி.மந்தையன் | " | பெயரை மாற்றிக் கொண்டதன் மூலம் எங்கள் வம்சம் புனித வம்சமாகவே தொடரும். |
| " | மனோகரன் | எஸ். பாலு | " | தமிழக புருட்டசின் பெயரை என் மகனுக்கு சூட்ட விரும்பவில்லை. |
| " | மு. மாறன் | (தரப்படவில்லை) | குன்னூர் | வடநாட்டுக் கங்காணியின் பெயரை மாற்றிக்கொண்டேன். |
| " | மனோகரன் | எம்.பி.நெடுமாறன் | ஆரபாளையம் | என் சகோதரனின் மகனுக்கு ஐந்தாம் படையின் பெயரை மாற்றி விட்டேன். |
| " | தமிழரசன் | (தரப்படவில்லை) | பாண்டிக்குடி | கொள்கை மாறியின் பெயரை வைத்துக் கொள்ள நான் என்ன பைத்தியக்காரனா ? |
| " | அன்பழகன் | வி.கே.உதயசூரியன் | பேராவூரணி | என் மாமன் மகனுக்கு துரோகியின் பெயரை மாற்றிவிட்டேன். |
| " | எம்.எஸ்.மணி மாறன் | (தரப்படவில்லை) | திருச்சிற்றம் பலம் | தாய்நாட்டுப் புகழ் காக்க தன்மானமற்றவரின் பெயரை விட்டுவிட்டேன். |

அண்ணா மீதும், தி.மு.க. மீதும் புழுதி வாரிவிட்டதாகச் சொல்லி சம்பத் என்பது துரோகப் பெயர் என்று சொன்ன மாலைமணி இப்போது வருகிறதா என்று தெரியவில்லை. அதன் ஆசிரியர் இப்போது இருக்கிறாரா என்றும் தெரியவில்லை.

இப்போது திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழ் அழிந்து கொண்டிருப்பதைப் பார்த்து என்ன எழுதுவார் என்று தெரியவில்லை. பெயரை மாற்றிக் கொண்ட மூவாயிரம் பேரும் அதற்கு காரணம் சொன்னவர்கள் இன்னமும் இருப்பார்கள். அவர்கள் தான் சிந்திக்க வேண்டும்!

சம்பத்து அவர்களுக்கு துரோகி என்றும், காட்டிக் கொடுக்கும் கயவர் என்றும், ஈரோட்டுச் சாக்கடை என்றும், சுயநலக்காரர் என்றும் அடிமை என்றும் ஈரோட்டு எட்டப்பன் என்றும் தமிழக புருட்டஸ் என்றும், வடநாட்டு கங்காணி என்றும் ஐந்தாம் படை என்றும் கொள்கை மாறி என்றும் தன்மானமற்றவர் என்றும் இழிப்பட்டங்களைச் சூட்டிய கழகத்தவர்கள் தமிழுக்கு திராவிடக்கட்சிகள் செய்துள்ள துரோகங்களுக்கு என்ன சொல்லப்போகிறார்கள்? இப்படி எல்லாம் எழுதச் செய்த மாலைமணி என்ன சொல்லும்?

"இந்தியர்கள் தோற்றத்தாலும் நிறத்தாலும் வேறுபட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் சிந்தனையாலும் செயலாலும் வெள்ளையர்கள் ஆக்கப்பட வேண்டும்" என்று 19-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் திட்டமிட்டு 1855 வாக்கில் "இந்திய மக்களுக்கு ஆங்கில இலக்கியத்தையும் அறிவியலையும் ஆங்கில மொழி வாயிலாக கற்றுக் கொடுக்க.". தலைமை ஆளுநரான ஆங்கிலேயர் ஆணையிட்டிருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைத்தான் ஆங்கிலேயர் போனபின்னும் செயலாக்கிக் கொண்டிருக்கின்றன திராவிடக் கட்சிகள் "ஆங்கில அடிமை விருது" என்று ஒன்று கொடுக்கப்படுமானால் அது இவர்களுக்குத்தான் கிடைக்கும்.

அன்புக்குரிய தமிழ்நாடே, அன்புக்குரிய தமிழே, அன்புக்குரிய தமிழ் மக்களே என்றும் மண்ணும் மொழியும் மக்களும் நேசிக்கப்படும் தாயக அன்பை இழக்கச் செய்யும் படிப்பாக அயல்மொழிப்படிப்பு பெரும்பாலும் இருக்கிறது.

தமிழர்களுக்கு - குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு கிராமப்புற, பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு ஆங்கிலம் எதிராக இருக்கிறது. சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிகுலேசன் பள்ளி பெற்றோரிடம் நடத்திய ஆய்வில் 72% பேர் தமிழ் வழியை ஆதரித்தனர். 20% பேர் மட்டுமே எதிர்த்தனர் என்றும் தெரிகிறது.

| பயிற்றுமொழி | விண்ணப்பித்த மாணவர்களின் சதவீதம் | மருத்துவம், பொறியியலில் படிக்க தேர்வு செய்யப்பட்டோர் சதவீதம் |
|---|---|---|
| தமிழ் | 80% | 23% |
| ஆங்கிலம் | 20% | 77% |

***தமிழ்நாட்டில் தமிழ் படித்தவர்கள் இருக்கும்போது ஆங்கில வழியில் படித்தவர்களே மருத்துவம் பொறியியல் உள்ளிட்டத் துறைகளில் அதிகம் வரும் நிலை தவறானது.***

தமிழ், தமிழர்களுக்கு வழியாய் இருக்கிறது. ஆங்கிலம் தமிழர்களுக்குத் தடையாய் இருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழே அகதியாய், தமிழ்நாட்டில் தமிழனே அடிமையாய், தமிழ்நாட்டில் ஆட்சியே இப்படிச் செய்யும் கொடுமையாய் இருக்கிறது.

தமிழால் ஒன்றுபடுவோம் என்பது தமிழ்ச்சான்றோர் பேரவையின் முழக்கம். ஆனால் தமிழால் ஒன்றுபடுவோம் என்பது போலியானது என்று மார்க்ஸிய அறிஞரான திரு. எஸ்.வி. ராஜதுரை அவர்கள் தலித்முரசு பேட்டியில் குறிப்பிட்டிருப்பது விமர்சனத்துக்குரியதாகிறது.

தி.மு.க. ஆட்சியில் தெலுங்குக்கு அரசாணை தானாக செயலுக்கு வருகிறது. தமிழுக்குப் போராடினாலும் 'வினா அறிக்கை' தான் வருகிறது. எனவே தி.மு.க. விலுள்ள உடன் பிறப்புகள் அரசாணை போட்டு செயலுக்கு கொண்டு வரும் வரையாவது தமிழைத் தெலுங்காக எண்ணிச் செயல்படுமாறு 'தமிழினத் தலைவரைக்' கோரவேண்டும்.

கழகம் என்றால் சூதாடும் இடம் என்று ஆதித்தனார் திராவிடக் கட்சிகளைச் சாடுவதுண்டாம். தமிழையே வைத்துச் சூதாடிவிட்டன திராவிடக் கட்சிகள்.

சில கோரிக்கைகள் நிறைவேறினால் மட்டும் போதும் என்று முடிவுகட்டுவதோ, திராவிடக் கட்சிகளின் மோசடி அம்பலப்பட்டால் போதும் என்று முடிவு கட்டுவதோ கூடாது. தமிழைச் சொல்லி தமிழ்நாட்டு தலைமையை பிடித்துக் கொண்டு தமிழ் - தமிழரை வஞ்சிப்போரை தூக்கி எறிய வேண்டும். இந்த மண்ணுக்குரிய முறைகளோடு தமிழ் தலைமை தாங்கும் தரமான தலைமைகள் உருவாக வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னருந்தமிழர் நாடே
    என்னிதயமாய் இருக்கும் வீடே
கண்ணருந்தமிழே எல்லாம்
    கலங்கிற நிலைமை தானா ?
உன்னரும் பிள்ளைகளும்
    உன்னையே இழக்கலாமா ?
உன்னை காக்கிற தலைமையுந்தான் - நாங்க
காணவே அழியுதம்மா!

தலைமைக்கு வந்தவங்க
    தமிழுக்கு நின்னதில்ல -
தமிழுக்கு நின்னவங்க - ஆளுந்
    தலைமைக்கு வந்ததில்ல - இந்த
மண்ணுக்கு அவலந்தானா
    மாநில நிலைமையெல்லாம்
கவலையோ கவலைதானா ?

தமிழுக்கு நிப்போமுன்னு
    தப்பாம சொன்னவங்க
தலைமைக்கு வந்திருந்தும்
    தமிழுக்கு நிக்கவில்ல.
தனக்குன்னு நின்னதால
    தமிழுக்கு நலுமையில்ல - அவலம்
தமிழரே நமக்குந்தானே!
    தமிழரே நமக்குந்தானே!
என்னருந்தமிழர் நாடே - எங்க
    தமிழுக்குச் சொந்த வீடே -
என்னருந்தமிழின் நாடே - எங்க
    தமிழருக்கான வீடே.

மண்ண நான் பார்க்கும் போதும்
    மரஞ்செடி கொடிங்களெல்லாம்
பூக்கிற பூவுங்களும்
    காத்தோட மூச்சுங் கூட
என்னருந்தமிழே நீ தான்!

ஏட்ட நான் பெரட்டும் போதும்
    எழுத்த நான் படிக்கும் போதும்
ஆட்சிய பார்க்கும் போதும்
    பேசற பேச்சுக்குள்ளும்
ஆங்கிலந்தானே எங்கும் - இது
    அன்னிய நாடு தானா ? - தமிழா
ஆங்கில வீடு தானா ?

தமிழையே எரிக்கச் சொல்லி
    தமிழனாய் இருக்கும் கொல்லி - நல்லத்
தமிழனே ஒதுக்கித் தள்ளி
    போட்டா மருந்தை அள்ளி
என்னடா ஒறக்கம் தம்பி
    ஏனிந்த மயக்கம் தம்பி
கண்ணடா தமிழும் மண்ணும்
    காணடா தமிழா நீயும்!

தமிழுக்கு உரிமையில்ல - தமிழா
    நீ என்னடா சொந்தபிள்ள ? -
தமிழருக்கு ஏறுந் தொல்ல - தமிழா
    இன்னுமா சொரணையில்ல ?

- 23-8-99



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர் நலம் காக்கலாம்
தமிழை தினம் காக்கலாம்
நல்ல தமிழோடு வெல்லும் வழியோடு
நல்ல தமிழாளவே - நம்
உள்ளம் தமிழாவவே!

வாழுந்தமிழோடு காணுந்தமிழ்நாடு
மேலும் பலியாவதா ?
சொல்லும் கருத்தெல்லாம்
தமிழில் இல்லாது
பள்ளி களமாவுமா - தமிழை
கொல்லும் இடமாவுமா ?
உள்ளம் முழுதெல்லாம்
பொங்கும் வெறியோடு
நீயும் களமாடடா - தமிழா
வெல்லும் வழி காணடா!

தமிழன் முறையெல்லாம்
தமிழன் வழியெல்லாம்
நொறுக்கத் துடிப்போரை
துதிக்கும் நிலையேனடா ? - தமிழா
ஒதுக்க வழிகாணடா - தவறை
ஒழிக்க வழிகாணடா!

உரிமை தமிழுக்கு
சிறுமை வரும்போது
பொறுமை சரியானதா ?
பொங்கி புயலாவடா - உடலை
ஏவி களமாடடா - தமிழை
ஏத்தும் வழிகாணடா!

ஆங்கில அடியார்கள்
ஆளுந் தமிழ்நாட்டை
ஆங்கிலம் தினமாளுது - மனதை
ஒடுக்கும் முறையாவுது - தமிழன்
அறிவை முடமாக்குது - தமிழா
விடிவை உருவாக்குவோம்.

தமிழர் நிலம் வாழ
தமிழர் மொழி வாழ
தமிழர் தமிழோடு
என்றும் அரசாள - உன்னை
தருவாய் விளக்காவவே! - நீயும்
வருவாய் வாழுந்தமிழாவவே!

24-5-99

ILAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

**குறிப்பு : கவிதைகள் எல்லாம் ஆசிரியரின் சொந்த கவிதைகளே.**